Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

THAMPI
links with
LIONAIR
Tickets Available For
RS. 1999/-
T.P. - Colombo - 01-343125
Jaffna - 021-2222040 / 2823 / 2504
Hotline - 0777-382343, 072-401423

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 புரட்டாதி 26 ஆம் நாள் (12.10.2002) சனிக்கிழமை இதழ் : 12

## கிழக்கு படுகொலைகளை கண்டித்து வடக்கு - கிழக்கு இன்று ஸ்தம்பிக்கும்

அம்பாறை காஞ்சிரங்குடா மற்றும் திருகோணமலை படு கொலைகளுக்கு ஆட்சேபம் தெரிவித்து இன்று வடக்கு - கிழக்கு எங்கும் துக்கதினம் அனுஷ்டிக்கப் படுகிறது.

இதற்கு பொது அமைப்புக்கள் பலவும் ஆதரவு தெரிவித்துள்ளன.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் ஆகியன படுகொலைகள் தொடர்பாக கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. யாழ். குடாநாட்டில் வர்த்தக நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்கள், தனியார் கல்வி நிலையங்கள் ஆகியன இன்று முழுக்கதவடைப்பு செய்யவுள்ளன. போக்குவரத்து எதுவும் நடைபெறமாட்டாது. அத்தியாவசிய சேவை தவிர்ந்த ஏனைய அனைத்து சேவைகளும் இன்று முழு அளவில் ஸ்தம்பித நிலையை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பலியான பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வீதிகளெங்கும் கறுப்புக் கொடிகள் கட்டப் பட்டிருக்கும்.

விண்ணாணம் விநாசியர்



அம்பாறையில ரெத்தம் காய முதல் திருமலையிலுமா...?

# வீதி மறியலில் ஈடுபட்ட தமிழ் மக்கள் மீது திருமலையில் காடையர் தாக்குதல்!

## 3 பேர் துடிதுடித்துப் பலி; 40 பேர் படுகாயம்

*(திருமலையிலிருந்து கெளதமன்,சிதம்பரநாதன்)*

**அம்பாறையில் நடைபெற்ற படுகொலைகளைக் கண்டித்து திருமலையில் நேற்று அமைதியான முறையில் வீதி மறியலில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது, பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த காடையர் சிலரால் மேற்கொள்ளப் பட்ட மிலேச்சத்தனமான கைக்குண்டு வீச்சிலும், துப்பாக்கிப் பிரயோகத்திலும் மூன்று அப்பாவி மக்கள் கோரமாகப் பலியாகினர். 40க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.**

அம்பாறை - காஞ்சிரங்குடாவில் அதிரடிப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களின் நினைவாக திருகோணமலையில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகள் பூட்டப்பட்டும், பாடசாலைகள் மூடப்பட்டும், போக்குவரத்து நிறுத்தப்பட்டும் நேற்றுக்காலை இந்த ஹர்த்தால் ஆரம்பமானது.

### திருக்கடலூரில் வீசப்பட்ட முதலாவது கைக்குண்டு

பொதுமக்கள்-வீதிகளின் குறுக்கே அமர்ந்து தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர். இதன் போது காலை 8.15 மணியளவில் திருக்கடலூர் (படுக்கை) பகுதியில் வீதி மறியலில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்களுடன், சிறிமாபுர பகுதியில்வாழும் சிங்கள மக்கள் சிலர் வாய்த்தர்க்கம் செய்தனர்.

வாய்த் தர்க்கம் முற்றிய வேளை திடீரென கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது. துப்பாக்கிச் சூடும் மேற் கொள்ளப்பட்டது. இதன் போது கைக்குண்டுத் தாக்குதலில் இருவரும் துப்பாக்கிச் சூட்டில் ஒருவருமாக மூவர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் திருமலை பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இதனால் அப்பகுதியிலிருந்து மக்கள் கலைந்து ஓடினர். பதற்றமான சூழலும் உருவானது.

### வாய்த்தர்க்கம் முற்றி கைகலப்பானது

இதன் பின்னர் - சற்று நேரம் கழித்து திருமலை நகரின் நுழைவாயிலான அநுராதபுரச் சந்திக்கு அண்மையாக, காந்தி நகர் பிரதேசத்திலுள்ள 'ரௌன் டவுன்' விடுதிக்கு முன்னால் வீதி மறியற் போராட்டம் செய்த தமிழ் மக்களுடன் அபேபுர பகுதியிலிருந்து வந்தவர்கள் வாய்த்தர்க்கத்திலும் கைகலப்பிலும் ஈடுபட்டனர்.

இதன்போது அப்பகுதிக்கு வந்த பொலிஸார் தலையீடு செய்து கலவரத்தை அடக்க முயன்றனர். இதன்போது பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும், கான்ஸ்டபிள் ஒருவருமாக இருவர் சிறுகாயமடைந்தனர்.சம்பவத்தை தொடர்ந்து அப் பகுதியிலிருந்து மறியல் செய்த பொதுமக்களை விலகிச் செல்லுமாறு பொலிஸார் உத்தரவிட்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)







**திருமலையில் கொல்லப்பட்ட சோணலிங்கம், சசிக்குமார் ஆகியோரின் சடலங்களையும் படுகாயமடைந்த இருவரையும் படங்களில் காணலாம்.** *(படங்கள்: கெளதமன்)*

## இரு மேஜர் ஜெனரல்கள் திருமலை விரைந்தனர்

(கொழும்பு)

திருகோணமலை அசம்பாவிதங்களைத் தொடர்ந்து பிரதமர் ரணிலின் பணிப்பின் பேரில் இராணுவத்தை சேர்ந்த மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா, மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் திருகோணமலை சென்றுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் நிலவும் பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக நேற்று பாதுகாப்பு அமைச்சில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## பட்டமளிப்பு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவிருந்த யாழ். பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்டமளிப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை அறிவித்துள்ளார்.

## நோர்வே குழுவினரின் யாழ்.விஜயம் ரத்து!

எதிர்வரும் புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவிருந்த நோர்வே வெளியுறவு அமைச்சர் தலைமையிலான தூதுக் குழுவின் யாழ்ப்பாண விஜயம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தூதுக்குழுவினரின் யாழ். விஜயத்தை முன்னிட்டு ஏற்பாடுகளை கவனிப்பதற்காக நோர்வேத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார். எனினும் நேற்று மாலை எமக்கு கிடைத்த தகவலின் படி மேற்படி தூதுக்குழுவினரின் யாழ்.விஜயம் இரத்து செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## ஜனாதிபதி தலையிடுவாராம்

கிழக்கில் நிலைமைகளைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி சந்திரிகா அதில் தலையிட வேண்டிய நிலை ஏற்படும் என பொது ஜன ஐக்கிய முன்னணியின் எம்.பி தினேஷ் குணவர்த்தன எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதி முப்படைத்தளபதி என்ற வகையில் இனிமேல் தலையிட வேண்டிய நிலை ஏற்படும். அதற்கு முன்னதாக அரசு கிழக்கில் நிலைமைகளை கட்டுக்குள்கொண்டு வர வேண்டும் என தினேஷ் குணவர்த்தன அரசை எச்சரித்துள்ளார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்!

*(நேற்றைய தொடர்ச்சி)*

முகமட் பரூத் முகமட் சாபீர் (கிண்ணியா-6), மயிடீன் முகமத் அசாத் (கிண்ணியா-5), அருளாநந்தன் நிரோஷினி (வவுனியா), யோகநாதன் உமேஸ்காந் (மட்டக்களப்பு), சலல்டுயின் அம்சாய் (அட்டாளைச்சேனை-1), முகடீன் பாவா பார்கனா பேகம் (நிந்தாவூர்-5), சந்திரகுமார் பிரேமினி (கல்முனை), ரசீபு முகமட் சாரூப் (கலவள)

**தமிழ்**

தோமஸ்மேரி மைக்ரட்(கொழும்பு-13), தமிழ்செல்வி மின்காந்தவேள் (வவுனியா), யசோதா குகதாசன் (வல்வெட்டித்துறை), குமுதினி தியாகலிங்கம் (கிளிநொச்சி), கந்தசாமி வாசுகி (கிரான்), பேரின்பராஜா ஜெயரஞ்சினி (கல்முனை), தவபாலன் சுபத்திரா (மட்டக்களப்பு), அருள்நாயகம் நிரோசா அனோயினி (மட்டக்களப்பு), ராசரத்தினம் வனித்தா (தெட்டதீவு-1) தியாகராஜா கோமதி (கரவெட்டி), வினாசித்தம்பி விரோயினி (கோட்டைக்கல்லாறு-2) சண்முகம் பிரியதர்சினி (அக்கறைப்பற்று),மயிலுக்கொடி ஜீவமலர் (மட்டக்களப்பு) கோபால் தர்சினி (கல்முனை) சண்முகப்பிள்ளை அகிலா (மட்டக்களப்பு), அருளாநந்தம் ஜெயானந் (முல்லைத்தீவு), தர்மலிங்கம் யசோதா (புதுக்குடியிருப்பு), ரட்ணசிங்கம் சிவகுமார் (புதுக்குடியிருப்பு), தெய்வநாயகம் தயாவதி (பெரியபுரத்தீவு) தாமோதரம் நடேசமூர்த்தி (மட்டக்களப்பு), கதிரவேற்பிள்ளை தினேஸ் (தம்புலுவில்-2), கணபதிப்பிள்ளை ஜீவானந்தம் (மட்டக்களப்பு), மைதிலி கணேசமூர்த்தி (மட்டக்களப்பு), மதிவதனி கணேசபிள்ளை (மட்டக்களப்பு), அமலநாதன் கிசோதர்சங்குருஸ் (கோட்டைக்கல்லாறு-1), வாசுகி தம்பியைய்யா (கொக்குவில்), சுப்பிரமணியம் சியாமளா(கோப்பாய்),ஜனித்தா குமாரவேலு (புத்தூர்) மூத்ததம்பி சசிதரன் (சித்தாண்டி-3), இலட்சுமணன் சுதாகரன் (மட்டக்களப்பு), இராசதுரை தனுராய் (மட்டக்களப்பு), மாமாங்கம் ஜீவகாந் (கொக்கட்டிச்சோலை), யோகநாத் ஜனார்த்தனன் (களுவாஞ்சிக்குடி), பாலசிங்கம் நிதர்சினி (சுன்னாகம்), வெற்றிவேல் நித்தியபிரியா (மட்டக்களப்பு), விஜயலதா கணபதிப்பிள்ளை (அம்பாறை), யோகராஜா சுபர்ணா (மட்டக்களப்பு), சிவலிங்கம் கௌரி (மட்டக்களப்பு), அமரசிங்கம் மாலதி (ஆரையம்பதி-3), சின்னராசா ரதினி (பெரியபுரத்தீவு), வேல்முருகு சிறிவித்தியா (குருக்கள்மடம்), சரவணமுத்து சுயாத்தா (மட்டக்களப்பு), சுந்தரலிங்கம் சுபானோ (கிரான்), கனகரத்தினம் அருனாளினி (மட்டக்களப்பு), ராஜேந்திரம் காசினி (மட்டக்களப்பு), ராஜரட்ணம் தர்மிளா (சுன்னாகம்), வனஜா ராஜரட்ணம் (வேலணை), கந்தசாமி சித்திராதேவி (முல்லைத்தீவு), சைலாயினி கனகசிங்கம் (வவுனியா), தங்கவேலாந்தன் சரத்பாபு (ஆனைக்கோட்டை), நவரட்ணம் சர்மிளா (உருத்திரபுரம்), துளசிகா பாலசுப்பிரமணியம் (வவுனியா), பி.சுதர்சினி (காரைநகர்), ஜெயசுந்தரம் பிரியதர்சினி (சம்மாந்துறை), ராம்யா செல்வராஜா (இணுவில்), அனுசியா ராமநாதன் (அளவெட்டி), அருந்ததி சிவபாதசுந்தரம் (யாழ்ப்பாணம்), தர்சினி குணராஜா (திருநெல்வேலி), அந்தோனிப்பிள்ளை கென்சலிற்றா (மன்னார்), ராஜகாந்தன் ரமணன் (புளியங்குளம்), நடராஜா தயானந்தி (சுழிபுரம்), அருளம்பலம் பிரபாகரன் (முள்ளியவளை), தர்மலிங்கம் காந்தரூபன் (மட்டக்களப்பு) மகேந்திரம் கிருஸ்ணகுமார் (முள்ளியவளை), யோசப் கனிஸ்டஸ் (கல்முனை), குழந்தைவேல் தர்மசீலன் (திருக்கோயில்), காந்தமுத்து தேவரஞ்சன் (காரைக்குடா), விஜயதிஸ்சா புவிவண்ணன் (ஆரையம்பதி), ரட்ணம் லீனாட் பேகின் (யாழ்ப்பாணம்), கனகசபை விஜயா (மட்டக்களப்பு), சின்னராசா வினோதினி (திருகோணமலை)

**கிறீஸ்தவம்**

கந்தசாமி பிரதாபன் (முருகண்டி), தேவதாஸ் யூலின் (முல்லைத்தீவு), அகஸ்டீன் மலர்விழி ஜோன் மயராசா (கிளிநொச்சி), கில்லாரி மரினா (புதுக்குடியிருப்பு), ஏ.சிவபாலன் (பரந்தன்), நற்குணம் மேரி யஸ்டீன் கலா (யோகபுரம்), ஜெயசூரியா நிஷாந்தினி (லிங்கநகர்), நவரட்ணம் குயின்சி (பூநகரி), பிரான்சிஸ் மேரி மெரிட்டலின் (முருங்கன்), சத்துருக்கன் சுந்தரலிங்கம் (மட்டக்களப்பு), மேரிய சில்ட பள்டாசர் (மட்டக்களப்பு), செல்லர் அக்னியாதா (மட்டக்களப்பு), ஜோசப்மேரி நிரஞ்சினி (மட்டக்களப்பு), யோகராசா அமுதா (மட்டக்களப்பு), ஆரோக்கியநாதன் அநதிசியா (மட்டக்களப்பு), கனகரத்தினம் அருளாயினி (மட்டக்களப்பு), ஜோசப் ஜோன் (செட்டிக்குளம்), தோமஸ மேரி மில்ரெட் (கொழும்பு-13), மேரியன் இராட் லக்ஸ்மன் (புத்தளம்), அலோசியஸ் ஆர்னட் சுதாகரி (வவுனியா), அலோசியஸ் அன்ரனிலூடன் யுகனியா (வவுனியா), அந்தோனிப்பிள்ளை அமலநாயகி (வவுனியா), வெளிச்சோர் ஆன் மேரி யசித்தா கொன்சி (வங்காலை), யோகன்டியாஸ் கிருஸ்டல்டா (மன்னார்), ஜோர்ச்ராஜா மொமில்டராஜு (நேரியகுளம்), பிரக்லின் பிரியதர்சினி (இளவாலை), ஆபிரகாம்லிங்கன் யூனியஸ் பெலிசியா (யாழ்ப்பாணம), அயோசியஸ் அனிற்ரா (இளவாலை), செபஸ்டியம்பிள்ளை ஜெயசிந் (உடுவில்), அருமைநாதன் கிருசாந்தி (யாழ்ப்பாணம்), தேவதாஸ் மேரி மெடோன் (யாழ்ப்பாணம்), ராஜ்மண்ட கனத் கிளட்டியஸ் (பருத்தித்துறை), கிறிமில்டா ரோசானி ஜெயசீலன் (வட்டுக்கோட்டை), ரத்தினம் லினாட் பேகின் (யாழ்ப்பாணம்), சாமிநாதர் சுஜாத்தா (பருத்தித்துறை), சௌந்தர்நாயகம் அல்பேட் றீகன் (யாழ்ப்பாணம்), ஆசீர்வாதம் சற்குணராஜேஸ்வரன் (நெடுந்தீவு), ஜோசப்ஜோன் மயூரன் (சண்டிலிப்பாய்), கிருஸ்டியன் இமானுவேல் ராஜசிங்கம் குப்ரீகன் (பண்டத்தரிப்பு), உதயகுமார் சசிக்குமார் (மல்லாகம்), ஜெசுதாஸன் மேரி இமல்டா (ஆனைக்கோட்டை), வேகவனம் சுமன்ராஜ் (குருநகர்), மரியநாயகம் தனசீலி (யாழ்ப்பாணம்), மதுரநாயகம் ஜுன்தர்சினி (மானிப்பாய்), நவரட்ணராஜா மேரின் நிலானி (யாழ்ப்பாணம்), அருமைநாயகம் ராஜிடானியலா (சுன்னாகம்), பவ்ளீன் நிரங்கனி (மானிப்பாய்), வன்சளிற்றா பிரத்மீ ரஞ்சித் விஜயகுமார் (வட்டுக்கோட்டை), பன்சராஜ் குயின்சி (சுண்டுக்குளி), பாக்கியநாதன் அலெக்ஸ்பியாட் (யாழ்ப்பாணம்), ஜெயசுதன் சர்மிளா லோகினி (யாழ்ப்பாணம்), ஜேசுரட்ணம் டன்சிக்கா எழிலி (மிருசுவில்), சுவாமிப்பிள்ளை அன்ரன்ஜொபிற்றா (இளவாலை), பாலகிருஸ்ணன் நவராஜ் (வெலிஓயா), செபமாலை மேரி டொரினா (முல்லைத்தீவு), விஜயகுமார் அலன்ஜெனித்தா (திருகோணமலை), கருணாரட்ண ஜெசித்தா (இருதயபுரம்), அலோசியஸ் மேரி சாமிளா (கல்முனை), செல்லையா பாஸ்கரன் (தம்பிலுவில்), செபஸ்டியன் மரியநாயகி (அம்பாறை).

**ஆரம்பப்பிரிவு**

சின்னத்தம்பி செல்வராசா (வவுனியா), நவரட்ணலிங்கம் வேணுகா (சுன்னாகம்), கதிரமலை சிவகௌரி (யாழ்ப்பாணம்), பேரின்பலிங்கம் உதயவதனி (பூநகரி), சிவலோகநாதன் தனுசியா (ஒட்டிக்குடா), விவேகானந்தன் கமலரஜனி (முல்லைத்தீவு), சிவகௌரி சின்னத்துரை (சுன்னாகம்),சிவதர்சினி சிவசுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்), விஜயகீதா தங்கவேலாயுதம் (குடத்தனை), நந்தினி நடராசா (அச்சுவேலி), சந்திரவதனா அப்புத்துரை (அளவெட்டி), தோமாஸ் மேரி மில்ரெட்(கொழும்பு-13), தர்மலிங்கம் ஜெகப்பியா (வவுனியா), தேவராஜா யாழினி (கொழும்பு-6), கணபதிப்பிள்ளை ஸ்ரீகௌரி (பூநகரி), பாலசுப்பிரமணியம் துளசிகா (வவுனியா), செல்வரத்தினம் விஜயதர்சினி (வவுனியா), பாலசுந்தரலிங்கம் பாலரூபினி (வவுனியா), கந்தையா தயாளினி (சண்டிலிப்பாய்), நடராசா வசந்தகுமாரி (மாதகல்), நடராஜா தயாநந்தி (சுழிபுரம்), இராஜேந்திரம் கோகிலவதனி (வட்டுக்கோட்டை), சிவபாதசுந்தரம் அருந்ததி (யாழ்ப்பாணம்), மதுரநாயகம் ஜீன்தர்சினி (மானிப்பாய்), பரராஜசிங்கம் சுஜாந்தினி (வல்வெட்டித்துறை), சிவானந்தம் கிருபானந்தராஜா (ஈச்சிலம்பற்று), மனோயா மனோகரன் (உடுப்பிட்டி), சங்கரப்பிள்ளை பத்மராஜா (கோண்டாவில்), துரைரட்ணம் திலீப்குமார் (மானிப்பாய்), தெய்வேந்திரம் எழில்ரஞ்சன் (உடுப்பிட்டி), கந்தசாமி பிரதாபன் (முருகண்டி), ரட்ணம் ஜெகாநந்தன் (வல்வெட்டித்துறை), பிரபாகரன் ஹனிசுதாகரன் கனி (விசுவமடு), தயானி சக்திவேல் (யாழ்ப்பாணம்), ராசேந்திரம் குணகரன் (முல்லைத்தீவு), ராசரத்தினம் வனஜா (வேலணை-6), குமாரவேலு ஜெனித்தா (புத்தூர்) பௌலின் நிராங்கனி (மானிப்பாய்), கதிரேசு யசிந்தன் (ஆனைக்கோட்டை), சின்னத்துரை சுதாகரன் (மூதூர்), சுப்பிரமணியம் மணிவதனன் (திருகோணமலை), ரட்ணம் கிவெல் பெகின் (யாழ்ப்பாணம்) ஐ.எம்.நபார் (மருதமுனை), எம்.எம்.ஏ. ஹபீல் (மருதமுனை), ராஜரத்தினம் லாவேந்திரராஜா (மூதூர்), குழந்தைவேலு தர்மசீலன் (திருக்கோயில்), ஏ.எம்.எம்.உயீப் (மூதூர்-5), ராஜரத்தினம்சுதாகரன் (கனகராயன்குளம்), ராசா ரத்தினம் வனித்தா (மட்டக்களப்பு), செல்வரத்தினம் ஜனாத்தன் (வவுனியா), அப்துல் சமட் ரசீன் (பாலாவி), சிவசுப்பிரமணியம் திவாகர் (கிளிநொச்சி), ராஜேந்திரம் சுகாசினி (கல்லடி), அமரசிங்கம் மாலதி (ஆரையம்பதி), மூத்ததம்பி சசிகரன் (சித்தாண்டி-3), லட்சுமணன் சுதாகரன் (துறைநீலாவணை-5), யோகநாதன் ஜனார்த்தனன் (களுவாஞ்சிக்குடி), சிவலிங்கம் கௌரி (களுவாஞ்சிக்குடி), சாவுடீன் முகமட் யஸான் (பொறலுவெவ), இலங்கைநாதன் தயாபரன் (மானிப்பாய்), கமலவேனி ராஜன் (முள்ளியவளை), தில்லையம்பலம் நிரஞ்சனா (கிளிநொச்சி), தவரட்ணம் யசித்தா (மல்லாவி), முருகேசு கௌசினி (மல்லாவி), மயில்வாகனம் சகிலா (தெகிவளை), மின்காந்தவேள் தமிழ்செல்வி (வவுனியா), ரட்ணராஜா ரஜனி (யாழ்ப்பாணம்), கந்தசாமி விஜயலக்ஷ்மி (காரைநகர்), பரராஜசிங்கம் பிருந்தா (சண்டிலிப்பாய்), சிவகுரு தீபன் (சாவகச்சேரி), பிரான்சிஸ் பிரதீஸ்கரன் (ஒட்டிசுட்டான்), தங்கவேலாயுதம் சரத்பாபு (ஆனைக்கோட்டை), நவரட்ணம் ரவிதாஸ் (புளியம்பொக்கணை),ராமணநாதன் மகிந்தன் (பருத்தித்துறை), ராமணநாதன் ரதிக்குமாரி(காரைதீவு-10),எம்.ஏ.சப்ரீயா(சம்மாந்துறை),உதண்டிச்சொட்டி பிரதீபா (திருகோணமலை), தம்பிப்பிள்ளை சுதன் (அளவெட்டி), எம்.எம்.ஹமீஸ் (மருதமுனை-3), சட்.ஏ.சாஜகான் (மருதுகாமம்), சத்துருக்கன் சங்கரலிங்கம் (துறைநீலாவணை), கோபால் தர்சினி (கல்முனை), புஸ்பமலர் செல்வராஜா (புதுக்கோவை), ரம்யா செல்வ ராஜா (இணுவில்), தம்பு யோகேந்திரன (தாளையடி), விஜயராசா இளையராஜா (தொண்டமனாறு), கருணமூர்த்தி பத்மகாந்தன் (வரணி), பரமேஸ்வரன் வரதராஜா (உரும்பிராய்), கணேசலிங்கம் பகிரதி (உரும்பிராய்), *(நாளை தொடரும்)*

# விளையாட்டு

## டெஸ்ட் போட்டிகளில் ட்ராவிட் தொடர்ச்சியாக நான்கு சதங்கள்!

டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியாக நான்கு சதங்களைப் பெற்றுக் கொண்டவர் பட்டியலில் ராகுல் ட்ராவிட் நான்காவது இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்திய-மேற்கிந்திய அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் டெஸ்ட போட்டியிலேயே அவர் நான்காவது தொடர் சதத்தைப் பெற்றுள்ளார்.

பம்பாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது நாள் ஆட்டத்தில் இவர் 100 ஓட்டங்களை பெற்று தனது நான்காவது சதத்தைப் பூர்த்தி செய்துள்ளார்.

நேற்று முன்தின ஆட்டத்தில் நூறு ஓட்டங்களைப் பெற்றபின் களைப பின் காரணமாக ட்ராவிட் ஆட்டத்தைத் தொடரமுடியாமல் ஆடுகளததைவிட்டு வெளியேறினார்.

## தீவக உதைபந்தாட்டம்

## இறுதிப் போட்டிக்கு தெரிவான பாடசாலைகள்

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவருகின்றன.

இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள அணிகளின் விபரம் வருமாறு.

18 வயதிற்குக் கீழ்

யா/ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி எதிர் வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி வித்தியாலயம்.

16 வயதிற்குக் கீழ்

வேலணை வைத்திலிங்கம் துரைசுவாமி வித்தியாலயம் எதிர் காரை. கலாநிதி தியாகராஜா ம.ம.வித்தியாலயம்.

14 வயதிற்குக் கீழ்

புங்குடுதீவு மகாவித்தியாலயம் எதிர் புங்குடுதீவு சித்திவிநாயகர் வித்தியாலயம்.

(112)

**கல்வி**

O/L இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் சகல அலகுகளும் அதிவிசேட தரத்தில் கற்பிக்கப்பட்டு மீட்டலுடன் வினாவிடை வகுப்புக்களும் 20 அல்லது 40 நாட்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் A பெறுபேறடைவதற்கு நிறைவேற்றப்படும்.

க.ஆறுமுகநாதன்,
10,கச்சேரி கிழக்கு
ஒழுங்கை,
சுண்டுக்குளி. 001

For Urgent Door - to - Door Air Express Service to any part of the world, please contact DHL on
01-304 304

Our Agent Office is located at :

**Cosmos Marketing Services**

200, K.K.S. Road,
Jaffna.

DHL
WORLDWIDE EXPRESS

(சி-054)

சுன்னாகத்தில் ..

**எரிக் கணேஷ்**

- இலவசமாக கண்களை பரிசோதித்து தரம்மிக்க மூக்குக் கண்ணாடிகளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளவும்
- சீன முறையில் பயிற்சிபெற்ற நிபுணர்களினால் சொந்தப் பற்களுக்கு நிகரான சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும்.
- மிதப்புப் பற்களை 3 மாதகாலத்தினுள் சீரமைத்துக் கொள்ளவும்

இத்தனைக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.... எரிக் கணேஷ்

பாடசாலை மாணவர்களுக்கு விசேட கழிவுண்டு

எரிக் கணேஷ்

மூக்குக்கண்ணாடியகமும், பல்கட்டுமிடமும்
564, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளைகள்:- 80, K.K.S. Rd, சுன்னாகம். 91, K.K.S. Rd, கொக்குவில்.

(சி-034)

## சின்னஞ்சிறு செய்திகள்

### பண்டத்தரிப்பில் திருநாள் திருப்பலி

(இளவாலை)

பண்டத்தரிப்பு பற்றிமாதா ஆலயத்தில இன்று காலை 7.00 மணிக்கு திருவருட் சாதனச்சடங்கும், அன்றையதினம் மாலை நற்கருணை வழிபாடும், நாளை காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறும் என்று பங்குத்தந்தை தெரிவித்துள்ளார். (41)

### அசிற் குடித்து இளைஞர் மரணம்

(ஈச்சமோட்டை)

நீர் என நினைத்து அசிற்றினை அருந்திய இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் யாழ்.பெருமாள் கோவிலடிப்பகுதியில் நடைபெற்றது. இதில் பாபு (வயது 32) என்ற நபரே மரணமடைந்தவராவார்.

### கடலை, அவல் விலைகள் உயர்வு

(ஊரெழு)

நவராத்திரி விழா ஆரம்பித்ததை அடுத்து கடலை, அவல் என்பவற்றின் விலைகள் அதிகரித்துள்ளது. பெரியகடலை 1கிலோ 115ரூபா ஆகவும் சிறிய கடலை 1கிலோ 70ரூபா ஆகவும் அவல் ஒரு கிலோ 55ரூபா முதல் 60 ரூபா ஆகவும் விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை, மரக்கறிகளின் விலையும் திடீரென அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பட்டமளிப்பு விழாவில் கலை நிகழ்ச்சிகள்

யாழ்.பல்கலைக்கழகத்தின் 2002ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு இராமநாதன் நுண்கலைக்கழக இசை, நடனத்துறை மாணவர்கள் இணைந்து வழங்கும் சிறப்புக் கலைநிகழ்ச்சிகள் நாளை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இதில் குழு இசை, இசைக் கோலம், லயக்கோலம், ஆடல் அருவி போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதெனவும் இதில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளது.

### சர்ப்ப வியூகம் வெளியீடு

செம்பியன் செல்வனின் "சர்ப்ப வியூகம்" எனும் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

செங்கை ஆழியானின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வரவேற்புரையை ஐயா.சச்சிதானந்தம் நிகழ்த்துவார். தொடர்ந்து வெளியீட்டுரையை மயிலங்கூடலூர் பி.நடராசனும், ஆய்வுரையை பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம் (நந்தி), புதுவை இரத்தினதுரை ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

### பாராட்டு விழா

சமூகசேவையாளரும், விளையாட்டு வீரரும், தமிழபிமானியுமான ஓய்வுபெற்ற நில அளவை உதவி அத்தியகட்சர் வல்லிபுரம் சின்னத்துரை யாழ்.மாவட்ட சமாதான நீதவானாக நியமனம் பெற்றமைக்காக நாளை காலை 9.00 மணிக்கு பாராட்டு விழா நடத்தப்படவுள்ளது.

இணுவில் மஞ்சத்தடி கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடைபெறும் இப்பாராட்டு விழாவுக்கு யாழ். பல்கலைக்கழக ஓய்வுபெற்ற சிரேஷ்ட போதனாசிரியர் ச. விநாயகமூர்த்தி தலைமை தாங்கவுள்ளார்.

இந்த விழாவில் 'நமது ஈழநாடு' நிர்வாகப் பணிப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.சிவமகாராஜா பாராட்டுரை வழங்குவார்.

### நவராத்திரி விஷேடபூசை

இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் நவராத்திரி விழாவையொட்டி விசேட பூசைகளும் தெய்வீக சொற்பொழிவுகளும் நடைபெற்று வருகின்றன. (76)

# வட-கிழக்கில் கண்ணிவெடிகள் அகற்றுவதற்கு எதிர்பார்த்ததிலும் அதிக காலம் செல்லும்!

## கலோ ட்ரஸ்ட் திட்ட முகாமையாளர் றிச்சர்ட் பௌஸ்ரர் பேட்டி

(நமது நிருபர்)

இலங்கையின் யுத்தம் நடந்த பகுதிகளில் கண்ணிவெடி அகற்றுவதற்கான காலம் எதிர்பார்த்த காலத்தைவிட நீடித்துச் செல்வதற்கான வாய்ப்புகளே இருப்பதாக மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனமான கலோ ட்ரஸ்ற திட்ட முகாமையாளர் றிச்சர்ட் பொஸ்ரர் தெரிவித்தார்.

இதேவேளை, கண்ணிவெடி அகற்றும் பிரிவின் நிபுணரும், தொழில்நுட்ப ஆலோசகருமான கோன் சோதி கூறும்போது -

எமது கலோ ட்ரஸ்ற நிறுவனம் முற்றிலும் சேவை மனப்பான்மையுடன், எந்தவித பலனையும் எதிர்பார்க்காமல் கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

கம்போடிய வாசியான கோன் சோதி மிகவும் உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும், நாயன்மார்கட்டில் உள்ள ஒரு மைதானத்தில் கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கு பயிற்சியினை வழங்கிக் கொண்டிருந்த போது எமது செய்தியாளருக்கு இவ்வாறு தெரிவித்தார்.

கோன் சோதி மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது ஒன்பது நாடுகளில் தங்கள் பங்களிப்பைச் செய்கின்ற கலோ ட்ரஸ்ற அமைப்பு 1987இல் உருவாக்கப்பட்டது. இதன் தலைமைச் செயலகம் கொங்கொங் தலைநகரத்தில் உள்ளது.

கண்ணிவெடி அகற்றும் பிரிவில் நாம் பணியில ஈடுவடுவதில்லை. மாறாக உள்ளூர் வாசிகளைப் பயிற்றுவித்து, அவர்கள் அதுபற்றிய பூரண அறிவினைப் பெற்று, சிறப்பான பயிற்சியினை முடித்து, தேறியவர்களாக அறியப்பட்டவர்களைக் கொண்டே கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடவைக்கின்றோம்.

மனிதாபிமான ரீதியில் செயற்படும் எமது நிறுவனத்தின் மற்றொரு நோக்கம் உள்ளூர் வாசிகளுக்கு வேலைவாய்ப்பினையும் கொடுத்தல் ஆகும். இந்த பணியில் ஈடுபடுவதற்காக பாரிய வாகனங்களும், உபகரணங்களும் வந்து சேர்ந்துள்ளன. நாம் எமது அமைப்பையும் பணியையும் மேலும் விஸ்தரிக்கும் நோக்கில் உள்ளோம்.

கண்ணிவெடி இருக்கும் என அறியப்பட்ட இடங்களை அடையாளமிட்டபின் அப்பிரதேசத்துக்குரிய வரைபடத்தினை வரைந்து திட்டமிடல் பணியை மேற்கொண்டு மிக நிதானமாக எமது பணியை செய்கின்றோம். கண்ணிவெடி முற்றிலும் அகற்றப்பட்டுள்ளது என்று உறுதி செய்யப்பட்ட பின்பே அவ்விடங்களை உரியவர்களிடம் கொடுத்து மீள்குடியேறுவதற்கு நாமும் ஒரு பங்களிப்பைச் செய்கின்றோம் என்றும் தெரிவித்த அவர் - கடந்த மூன்று கிழமைகளுக்கு மேலாக சாவகச்சேரி, கைதடி ஆகிய இடங்களிலும் மட்டக்களப்பு, மன்னார் மாவட்டங்களிலும் கண்ணிவெடிகளை அகற்றி வருகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 2500க்கு மேற்பட்ட வெடிபொருட்களை அகற்றியுள்ளோம். அண்மையில் உரும்பிராய் பகுதியில் அதிகமான அளவு கண்ணி வெடிகளை மீட்டுள்ளோம் என்றும் தெரிவித்தார்.

இறுதியாக - இப்பணியில் ஈடுபடும் போது தவறுதலான விபத்துக்கள் ஏதும் நடைபெற்றதா? அப்படி விபத்தினை சந்திப்பின் உங்கள் நிறுவனத்தின் பணி என்னவாக இருக்கும்? என்று எமது செய்தியாளர் கேட்டபோது:-

அப்படிச் சம்பவம் ஏதும் இதுவரைக்கும் ஏற்படவில்லை. அப்படி ஏற்பட்டால் உடனடியாக உரிய சிகிச்சையை மேற்கொண்டு விபத்துக்கான உண்மையான காரணத்தை அறிந்து விபத்தினை சந்திப்பவருக்கு தகுந்த இழப்பீட்டை வழங்குவோம் என்று பதிலளித்தார். (55,உ)

# யாழ்.-கொழும்பு பயணத்திற்கு மேலும் ஒரு புதிய விமானம்

## லயன் எயர் நிறுவனம் ஏற்பாடு

கொழும்பிற்கும் - யாழ்ப்பாணத்திற்கும் இடையே நடைபெற்று வரும் விமான சேவையில் புதிதாக ஒரு விமானம் சேவையில் அமர்த்தப்படவிருப்பதாக லயன் எயர் நிறுவனத்தின் தலைவர் சந்திரன் ரட்ணம் தெரிவித்தார். யாழ்ப்பாணத்துக்கான விமானப் பயணம் செய்வோரின் தொகை அதிகரித்து வருவதனால் புதிதாக ஒரு விமானத்தை சேவையில் அமர்த்த வேண்டி உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

புதிய விமானம் நவீன வசதிகளைக் கொண்டது எனவும் ஒரே நேரத்தில் 46 பயணிகள் பயணம் செய்ய முடியும் எனவும் தெரிவித்த அவர், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக விஷேடமாக ஒரு நாள் பயணசேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்திருந்தார்.

சுற்றுலா பயணிகள் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டு அங்கு முக்கியான இடங்களைப் பார்வையிட்டதும் அன்று மாலையே கொழும்புக்கு அழைத்துச் செல்லக் கூடிய வகையில் தாம் ஒழுங்குகளைச் செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## வேலணை, அல்லைப்பிட்டி, மண்கும்பான்

# அடிப்படை வசதிகள் இன்றி நோய்கள் பரவும் ஆபத்து!

(மண்கும்பான்)

அடிப்படை வசதிகள், மலசலகூட வசதிகள் எதுவுமற்ற அல்லைப்பிட்டி, வேலணை, மண்கும்பான் போன்ற தீவகப் பகுதிகளில் தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தற்பொழுது பெய்துவரும் பருவமழையை அடுத்து வெள்ளநீர் வழிந்தோடி, கட்டுக்கள் முற்றாக கட்டப்படாத கிணறுகளில் புகுவதால் இந்நீரை அருந்தும் மக்கள் பல்வேறு தொற்று அபாயத்திற்கு ஆளாகும் நிலையினைத் தடுக்கப் பொதுஅமைப்புக்களையும், சம்பந்தப்பட்ட திணைக்களங்களையும் நடவடிக்கை எடுக்கும்படி அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.(53)

# படித்த மகளிர் குடியேற்றத்தில் மக்கள் மீளக்குடியமர அனுமதி!

## 10 வீடுகள் இன்னமும் படையினர் வசம்

(மீசாலை)

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை குடியமர்த்தும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

மிருசுவில் கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் 551 ஆம் படையணியின் இராணுவ அதிகாரியான கேணல் நாணயக்கார, படித்த மகளிர் குடியேற்றத்திட்ட கிராமசேவகர் வி.வேல்முருகு மற்றும் மீளக் குடியமரவுள்ள குடும்பங்களைச சேர்ந்தோர் கலந்துகொண்டனர்.

இக்குடியேற்றதிட்டத்தில் மிருசுவில் துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு தெற்குபுறமாக இராணுவத்தினர் வசமுள்ள 10 வீடுகளைத் தவிர மிகுதி வீடுகளிலேயே மக்கள் குடியமர அனுமதிக்கப்பட்டனர்.

இப் பகுதியில் 5வீடுகள் தரை மட்டமாகவும் பெரும்பாலான வீடுகள் வீட்டுக் கூரையின்றியும் காட்சியளிக்கின்றன.மிகக் குறைந்த வீடுகளே ஓரளவு நல்ல நிலையில் காணப்படுகின்றன.

இக் குடியேற்றத் திட்டத்தில் 191 குடும்பங்களில் 128 குடும்பங்கள் நிரந்தரமாக வசித்து வந்துள்ளனர். இவர்களில் 110 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன.

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களிலும் சில வீடுகளில் இருந்து படையினர் தமது உடமைகளை அகற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பதவி உயர்வு வழங்கவில்லையாம் பலகல்ல மீது வழக்குத் தாக்கல்!

(கொழும்பு நிருபர்)

இராணுவத்தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு எதிராக இராணுவ அதிகாரி ஒருவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். தனக்கு முறைப்படியாக வழங்கப்பட வேண்டிய பதவியுயர்வை வழங்கவில்லை எனக்கூறியே இந்த வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

லெப். கேணல் பத்மசிறி உடுகம்பொல என்ற அதிகாரியே இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல்



லெப்.ஜெனரல் பலகல்ல

பலகல்ல தனக்கு கேணல் பதவியுயர்வைத் தரவில்லை என முன்னதாக இவ் மனித உரிமைகள் ஆணைக குழுவிடம் புகார் செய்திருந்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த ஜூலை 10ஆம் திகதிக்கு முன்னர் கேணல் பதவியை பத்மசிறி உடுகம்பொலவுக்கு வழங்குமாறு உத்தரவிட்டிருந்தது. ஆனால் இராணுவத் தளபதி இதனை நிறைவேற்றத் தவறியதால் தமக்கான பதவி உயர்வை வழங்க உத்தரவிடும்படி உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டு பேரவையினால் வாரந்தோறும் நடத்தப்பட்டு வரும் வாராந்த நிகழ்வில் இன்று முற்பகல் 10.30.மணியளவில் இசைமணி சி.துரைராசா அவர்களின் அறிமுக உரையுடன் கலாபூஷணம் எல்.லோகநாயகம் போலின் பக்க வாத்திய சகிதம் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. ([illegible])

### மண்கும்பானில் கத்திக்குத்துக்கு ஒருவர் காயம்.

(மண்கும்பான்)

மண்கும்பான் செட்டிக்காட்டுப் பகுதியில் நடந்த கத்திக்குத்துச் சம்பவம் ஒன்றில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

பாலசுப்பிரமணியம் (வயது40) என்ற நபர் மண்கும்பானிலிருந்து அல்லைப்பிட்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளை செட்டிக்காட்டு பகுதியில் மறைந்திருந்த ஒருவர் கத்தியால் குத்திவிட்டுத் தப்பிச் சென்று விட்டதாக கூறப்படுகின்றது.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (53)

### பயிர்ச்செய்கை ஆரம்பம்

(நாவற்காடு)

பருவமழையினை அடுத்து தென்மராட்சி கிழக்கில் படையினரால் அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள நெல்வயல்களில் விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் போது வயல்வெளிகளை ஊடறுத்து படையினரால் அமைக்கப்பட்ட பாதைகளையும் விவசாயிகள் அழித்து வருகின்றனர். (92)

### புதியஅதிபராக நியமனம்

(அரியாலை)

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் அதிபராக கடமையாற்றிய க. சண்முகலிங்கம் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளதை அடுத்து இம்மாதம் 10ஆம் திகதி முதல் சு. சிவபாதசுந்தரம் புதிய அதிபராக பதவியேற்றுள்ளார். (55)

### குடியிருப்புக்கு மத்தியில் தவறணைகள்

(கைதடி)

கைதடியில் மக்கள் குடியிருப்புக்கள் மத்தியில் இயங்கிவரும் இரு கள்ளுத்தவறணைகளால் அப்பகுதி மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

மது அருந்துபவர்கள் அப்பகுதியில் தினசரி அட்டகாசம் புரிகின்றனர் எனவும் உரிய அதிகாரிகள் இதனைக் கண்டும் இரு தவறணைகளையும் அகற்ற நடவடிக்கை எடுக்காமை குறித்தும் அப்பகுதி மக்கள் விசனம் அடைந்துள்ளனர். (31)

### அளவெட்டியில் மீளக்குடியேறியோருக்கு உதவி

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் அளவெட்டி மத்தி, அளவெட்டி வடக்கு கிராமசேவை யாளர் பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

அளவெட்டி மத்தியில் 150 குடும்பங்கள், அளவெட்டி வடக்கில் 30 குடும்பங்களுமாக வீடு துப்பரவாக்கும் உபகரணங்களான வாளி, அலவாங்கு, மண்வெட்டி போன்றனவும் விவசாயிகளில் 15 பேருக்கு விதை வெங்காயம், மண்வெட்டி, கச்சான் என்பனவும், 12 பேருக்கு நெல், உரம் ஆகியனவும் வழங்கப்பட்டன. (72)

# 'வேலை தேடி, வெயில்ல கருகி, கியூவில நிக்கிறம்'

யாழ்.வீரசிங்கம் கட்டடத்தில் தொழில் திணைக்கள மனித வள ஸ்தாபன சேவைப் பிரிவினரால் வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக மேற்கொள்ளப்படும் பதிவுகளுக்கு நேற்று வெள்ளிக்கிழமை ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் கூடி நின்றனர்.

வீரசிங்கம் மண்டப உள் நுழைவாசலிலிருந்து எரிபொருள் நிரப்பு நிலையம் வரை இந்த வரிசை நீண்டிருந்தது.

பதிவுகள் காலை 10மணி தொடக்கம் மதியம் 1 மணிவரையே நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டபோதும் பெருந்தொகையானோர் தளராமல் வரிசையாக காத்திருந்தனர்.

இவ்வாறு பதிவு செய்தவர்களின் பெயர்கள் பின்னர் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் வெற்றிடங்களுக்கான நியமனங்களின்போது தொழில் திணைக்களத்தினால் முறைப்படி பதிவுகள் செய்யப்பட்ட ஒழுங்கில் சிபார்சு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. திரண்டிருந்த இளைஞர், யுவதிகளுடன் உரையாடியபோது:-



கே.சுரேஸ் (வயது - 22)

நான் ஏ.எல் படிச்சிட்டு இப்ப தொழில் நுட்பக் கல்லூரியில படித்துக் கொண்டிருக்கிறன். நான் இங்க பதியுறது மூலமா வேலை கிடைக்கும் எண்ட நம்பிக்கையிலதான் இந்த வெயிலையும் பாராமல் நிக்கிறன். எங்கட அதிகாரிமார் சில பேர் செய்யும் ஊழலால தகுதியுடையவன் வெளியே நிக்க தகுதியில்லாதவன் உள்ளுக்கு போகிறான். இதை முதல் தடுத்த பிறகுதான் வேலைக்கு ஆட்களை நியமனம் செய்ய வேணும் எண்டது என்ர கருத்து. இதனால் நான் மட்டுமில்ல எல்லாரும் பயனடையலாம் என நினைக்கிறன்.



அந்தோனி ஞானசேகரன் (வயது -21)

நான் ஏ.எல் படிச்சிட்டு இப்ப வேலையில்லாமல் வீட்டில நிக்கிறன். நான் இந்தப் பதிவுகளால வேலை கிடைக்குமெண்டு நம்பிக் கையில வரேல (சிரித்துக் கொண்டு). சும்மா எல்லாரும் வந்திருக்கிறாங்கள் எண்டுதான் நான் வந்தனான். எனக்கு இந்த பதிவுகளைப் பற்றித் தெரியும். இப்படி எத்தனை இடத்தில் பதிஞ்சனான். இதனால் இதுவும் எனக்கு பெரிசா தோன்றேல. எனி நானும் காசு கொடுத்துத்தான் வேலை எடுக்கோணும். இப்ப திறமைக்கு மதிப்பில்லை. காசுக்குத்தானே மதிப்பு.

## யாழ். மண்ணின் பரிதாப நிலை!



எம்.ஷண் (வயது-21)

நான் ஏ.எல் படிச்சிட்டு வேலையில்லாமல் றோட்டில் திரியுறன். நான் இங்கு பதியுறதால வேலை கிடைக்கும் என நினைக்கிறன். நான் சுயமுயற்சியாலே ஏதாவது செய்வம் என்றால் காசு இல்லை. என்ன மாதிரி எத்தனை பேர் சுயதொழிலை ஆரம்பிக்க கையில காசு இல்லாம இருக்கிறாங்கள். இப்படியானாக்களுக்கு அரசாங்கமோ, இல்லாட்டி தனியார் நிறுவனங்களோ கடன் வசதி ஏற்படுத்திக் கொடுத்தா நல்ல பிரயோசனமாக இருக்கும் எண்டு நினைக்கிறன்.



கமலமதி (வயது 25)

விரக்தியின் விளிம்பில் வெயிலில் நிக்குறன். லஞ்சம் வாங்கிறவனுக்கு எங்கட நிலை தெரியுமா?. இப்பிடி பல முறை பதிஞ்சனான். ஆனா ஒண்டையும் காணேல. சும்மா அங்கேயும் இங்கேயும் திரியுறதால காசுதான் செலவாகுது. வேலை கிடைத்த பாடில்லை. எவ்வளவு காலத்திற்குத்தான் அம்மா அப்பாவும் பொறுப்பினம். நான் இங்க பதிய எனது சொந்த விருப்பத்தில வரேல. வீட்டுக்காரரின் தொந்தரவாலதான் வந்து நிக்கிறன்.







சந்திப்பு தே.லிவிங்ஸ்டன்

# இராணுவ ஆட்சியாளர் முஷாரவ் ஒரு எதிர்ப்புரட்சியை சந்திக்கிறாரா?

"இராணுவ ஆட்சி புரியும் சர்வாதிகாரி பெர்வெஷ் முஷாரவ், பாகிஸ்தானின் அடுத்த பிரதமர் யார் என்பதைத் தீர்மானிக்க முடியாது" என்று பாகிஸ்தான் மக்கள் கட்சித் (PPP) தலைவியும் முன்னாள் பிரதமருமான பெனாசிர் பூட்டோ, நேற்றுக்காலை மேற்கு ஐரோப்பிய செய்தி ஊடகத்திற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார். முஷாரவ் அரசாங்கத்தினால் அம்பலப்படுத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்களை அடுத்து பெனாசிர் குற்றவாளி என இராணுவ செல்வாக்குள்ள பாகிஸ்தான் நீதித்துறை தீர்ப்பு வழங்கியதையடுத்து அவர் பாராளுமன்றத் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. பெனாசிர் தற்போது பிரிட்டனில் தஞ்சமடைந்து வாழ்கிறார்.

பெனாசிரின் பாகிஸ்தான் மக்கள் கட்சி, பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் மற்றொரு முன்னாள் பிரதமரான நவாஷ் ஷெரிவ்வின் பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சியுடன் ஆசனங்களைக் கைப்பற்றுவதில சரிக்குச்சமன் என்ற போட்டி நிலையில் உள்ளது. நவாஷ் ஷெரிவ் நாடு கடந்த நிலையில் வாழ்கின்றார். முஷராவ், ஷெரிவ் பிரதமராக இருந்த வேளையில் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார்.

பாகிஸ்தானில் அதிகளவு ஆசனங்களைக் கொண்ட பஞ்சாப் மாகாணத்தில் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரவினால் வெறுக்கப்படும் முன்னாள் பிரதமர்களின் கட்சிகள் வெற்றிபெற்று வருவது ஆட்சி நிர்வாகத்தில் அவருக்குப் பெரும் இழுபறிகளைக் கொண்டுவரும் என அவதானிகள் தெரிவித்தனர்.

தேசிய ரீதியில் பாகிஸ்தான் மக்கள் கட்சியும், பாகிஸ்தான் முஸ்லீம் லீக்கும் ஆசனங்களைக் கைப்பற்றுவதில் முன்னணியில் திகழ்வது போல இஸ்லாமிய மதக்குழுக்களின் கூட்டு முன்னணியும் கணிசமான வெற்றிகளை ஈட்டிவருவது அரசியல் அவதானிகளை ஆச்சரியப்படுத்தியுள்ளது. முதன் முதலாக இக் கூட்டு முன்னணியில் ஸியா, சுனி முஸ்லீம் இனங்கள் ஒன்றுபட்டுள்ளமை ஒரு கவனிக்கத்தக்க விடயமாகும்.

அதேவேளை, பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அண்மித்த பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் தலிபான் ஆதரவுக் கட்சிகளும் ஆசனங்களைக் கைப்பற்றுவது மற்றுமொரு சிரமமான விடயமாக பாகிஸ்தான் ஜனாதிபதிக்கு அமையும் எனவும் எதிர்பார்க்கிறார்கள் அவதானிகள்.

ஒட்டுமொத்தமாக, பாகிஸ்தானின் இராணுவத்தளபதியாக இருந்து தன்னை ஜனாதிபதியாக பிரகடனம் செய்துகொண்ட பெர்வெஷ் முஷாரவ் தனது கொள்கைத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் அணிக்கு, தோல்விகரமான நிலைமைகளையே எதிர்கொண்டு நிற்கிறார்.

இத்தோல்விகளுக்குரிய நிலைமைகளைத் தோற்றுவித்ததில் செல்வாக்கு செலுத்திய பிரதான காரணியாக பாகிஸ்தானின் சடுதியான தலிபான் எதிர்ப்பு இருக்கிறது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏனெனில் தலிபானின் இராணுவக் கட்டுமானங்களைக் குழந்தைப் பருவத்தில் இருந்தே பாலூட்டி, தொட்டிலிட்டு, தாலாட்டி வளர்த்து விடலைப்பருவம் வரை கொண்டு வந்து சேர்த்து அவர்களுக்கான இராணுவ வியூகங்கள், உபாயங்களை வகுத்துக் கொடுத்ததில் மிகநேரடியான பங்கு முன்னாள் இராணுவத்தளபதியும் தற்போதைய பாகிஸ்தான் ஜனாதிபதியுமான பெர்வெஷ் முஷாரவ்வுக்கு உள்ளது.

தமக்கு அருகிலுள்ள நாட்டின் அரசாங்கம் தமது பொம்மை அரசாக இருக்க வேண்டும் என்பதிலும் அதுவே பாகிஸ்தானின் அரசியல் இராணுவ நலன்களுக்கு உகந்தது என்பதிலும் பாகிஸ்தான் அரசியல்வாதிகளை விட, அரசியல் பதவி மோகம் கொண்ட இராணுவவாதிகளுக்கு மிகத்தீர்க்கமான உறுதிப்பாடு இருந்தது. ஆகையால் பாகிஸ்தானின் உளவுசேவை நிறுவனமும் இராணுவமும் தலிபானை உருவாக்கியது.

போரினால் பாகிஸ்தானுக்குள்

## பாகிஸ்தான் பாராளுமன்ற தேர்தல் - ஒரு கண்ணோட்டம்.

அகதிகளாக வந்த குடும்பங்களைச் சேர்ந்த ஆண்பிள்ளைகளுக்கு மதக் கல்வி ஊட்டி, ஆயுதப்பயிற்சி கொடுத்து, ஆயுதங்கள், உபகரணங்களை வழங்கி (ஏவுகணைகள், இராணுவத்தாங்கிகள் உட்பட) தலிபான்களை உருவாக்கிய பாகிஸ்தான், இதனை ஒரு அரச இயந்திரத்தின் இராணுவப் பொறிமுறையான வெறும் யுக்தியாக மட்டும் பார்க்கவில்லை. தமது நாட்டுக் குடித்தொகையில் பெரும் பகுதி மக்கள் தலிபான்களை இலட்சியவாதிகளாகக் கருதுவதையும் பாகிஸ்தானின் தளபதிகளும் அதிகாரிகளும் நன்கு அறிவர். குறிப்பாகப் பாகிஸ்தான் அரசாங்கம், பாகிஸ்தான்; ஆப்கான் எல்லையிலுள்ள தமது பழங்குடி மக்கள் ஆப்கானுக்குள் சென்று தலிபான்களின் படையணிகளில் இணைந்து பணியாற்றுவதை அனுமதித்தே வந்தது. அன்றைய சூழ்நிலையில் பாகிஸ்தான்-ஆப்கான் உறவு என்ற விடயத்தில் குடிவரவு-குடியகல்வு விதிகளைக் கவனித்தால் 'பாஸ்போட்', 'விசா' என்ற பேச்சுக்களுக்கு இடமின்றி எல்லையற்ற நல்லுறவே பேணப்பட்டது.

இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய முஷாரவ், மீளாய்வு செய்ய வேண்டிய ஒரு விடயமாக பாகிஸ்தானின் தலிபான் தொடர்பான வெளியுறவுக் கொள்கை இருந்திருப்பினும் (அமெரிக்கா, மேற்கு நாடுகள் ஆகியவற்றின் இராஜதந்திர அழுத்தம் காரணமாக) பாகிஸ்தானின் அரசியல் இராணுவ மூல உபாயம் ஒன்றில் வெளியுறவு என்ற பெயரில் சடுதியாக மாற்றம் செய்வது உவப்பானது அல்ல என்று அவர் தீர்மானித்திருந்தார் என அவதானிகள் கூறுகின்றனர். அத்துடன் அவ்வாறு தீர்மானம் எடுத்திருந்தாலும் அதை அமுலாக்கம் செய்வதில் பழங்குடி மக்களும் பாகிஸ்தான் இராணுவத்தின் அதிகாரிகளும் பெரும் முட்டுக்கட்டையாகவே இருந்திருப்பர்.

ஆனால் செப்ரம்பர் 11, பாகிஸ்தானின் பூர்வீகமான இராணுவ, வெளியுறவுக் கொள்கைகளில் பெரும் திருப்புமுனைகளை ஏற்படுத்தி விட்டது. "நீங்கள் கெட்ட சக்திகளின் பக்கமா அல்லது அமெரிக்காவின் பக்கமா?" என்று வெளிப்படையாகக் கேட்டார் புஷ் உலகத் தலைவர்களை நோக்கி. இக் கேள்வியைப் பயன்படுத்தி ஜனநாயக விரோத சாயத்தைக் கழற்றிவிட முடிவு செய்தார் முஷாரவ். தலிபானுடனான சகல இராஜதந்திரத் தொடர்புகளையும் துண்டித்து, தலிபான்களின் உறவு வேண்டாமென்றும் தொடர்புகள் வைத்திருக்கும் பாகிஸ்தானியர் தண்டிக்கப்படுவர் என்றும் எச்சரித்தார்.

'தான் வளர்த்த கடாவை அடித்து' அமெரிக்காவுக்கு விருந்து வைத்தார் முஷாரவ். அமெரிக்காவினதும் மேற்கு ஐரோப்பாவினதும் நல்ல பிள்ளையாக மாறினார். தலிபான்களுக்கு முஷாரவ் துரோகம் இழைத்ததாகவே பாகிஸ்தான் மக்களும் முஷாரவ்வுடன் கூடப் பணியாற்றிய, பணியாற்றுகின்ற இராணுவ அதிகாரிகளும் கருதியிருந்தனர். ஆப்கானிலிருந்து தலிபான் ஆட்சியை அகற்றுவதில் அவர் அமெரிக்காவுக்குப் பக்கபலமாக நின்றார்.

இவற்றின் விளைவாக, முஷாரவ்வுக்கெதிரான வாக்குகளும் இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு ஆதரவான வாக்குகளும் எனத் தேர்தல் முடிவுகள் அவருக்கெதிராகத் திரும்புகின்றன.

ஆனால் தானே பாகிஸ்தானின் முக்கிய முடிவுகளை எடுப்பவர் என்றும் பாராளுமன்றத்தைத் தான் விரும்பிய நேரத்தில் கலைப்பேன் என்றும் கூறுகின்ற அதேவேளை, தேர்தலில் அமையும் பாராளுமன்றத்தினூடாக 'நிறைவேற்று அதிகாரமுள்ள' பிரதமர் தெரிவு செய்யப்படுவார் என்றெல்லாம் ஒன்றுக்கொன்று ஒவ்வாத விடயமாக முஷாரவ் பிரகடனங்கள் செய்கிறார்.

மேலும் காஷ்மீர் விவகாரத்தில் முஷாரவ் கடைப்பிடித்து வந்த இந்தியாவுக்கெதிரான கடும் போக்குகளை தேசிய உணர்வு என்ற அடிப்படையில் பாகிஸ்தானியர் ஆதரித்து வந்துள்ள போதும், அதே தேசிய உணர்வுத் தளத்தில் நின்று கொண்டே ஆப்கான் முஸ்லிம் சகோதரத்துவத்துக்குத் தங்கள் இராணுவ ஆட்சியாளர் துரோகமிழைத்ததாகப் பாகிஸ்தானிய மக்கள் பார்க்கிறார்கள்.

இதனால் முன்னைய அரசியல்வாதிகளின் ஊழல், லஞ்சம் சீர்கேடு என்பனவற்றை அம்பலப்படுத்தி 'கறைபடியாத கரங்களுடன்' பாகிஸ்தானுககு ஒரு நல்ல ஆட்சி தரும் சக்தியுள்ள மனிதனாக அவர் தன்னைக் காட்ட முற்பட்டமை எதிர்பார்த்தளவு எடுபடவில்லை.

இத்தேர்தல் முடிவுகளில் இருந்து எழுகின்ற கேள்வி ஒன்று உள்ளது. இராணுவ ஆட்சியாளர் முஷாரவ் ஒரு எதிர்-ப் புரட்சியை சந்திக்கிறாரா?

புவியரங்கன்

## வார்த்தை விளையாட்டு — 02




முழுப் பெயர் : ........................................

கற்கும் பாடசாலை : ........................................

கற்கும் தரம் : ........................................

முகவரி : ........................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. தென்னையில் இருந்து கிடைப்பது.
3. மலர்களில் ஒன்று.
4. நாளைக் குறிப்பது.
6. 'அச்சம்' என்பதன் ஒத்தகருத்து.
8. மலர்களால் தொடுப்பது.
9. அழகு.

### மேலிருந்து கீழ்

1. உயரமான மலை.
2. நீதி வழங்குபவர்.
3. முனிவர்களால் கோபத்தில் இடப்படுவது.
5. திக்கு.
7. நூறுலட்சத்துக்கு சமம்.

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்கு குட்பட்ட எவரும் பங்கு பற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில -

**நமது ஈழநாடு**
சிறுவர் அரங்கம்
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள்:-16-10-2002

சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பரிசு வழங்கப்படும்.



# சிறுவர் அரங்கம்

## வேடம் கலைந்த பூனை ஞானி

பசியால் சோர்ந்து போயிருந்த பூனை ஒன்று வீடொன்றுக்குள் நுழைந்தது. சமையல் அறைக்குள் உணவு ஏதும் கிடைக்குமா என அது தேடிப்பார்த்தது.

மண்பானை ஒன்றுக்குள் கொஞ்சம் பால் இருந்ததைக் கண்ட பூனை அதைக் குடிப்பதற்காகப் பானைக்குள் தலையை நுழைத்தது. பூனை பாலை குடித்துக் கொண்டிருந்ததைக் கண்ட வீட்டுக்கார அம்மா தடியொன்றை எடுத்து ஆத்திரத்துடன் பூனையை அடித்தார்.



பூனையின் தலையில் பானை சிக்கிக்கொள்ள தப்பியோட எத்தனித்தது. ஆனால் வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருக்க, பானை மீது ஒரு அடி விழுந்தது. பூனையின் தலையை மூடியிருந்த பானை உடைந்தது.

ஆனால் பானையின் விளிம்பு வளையம் உடையவில்லை. கழுத்தில் வளையத்துடன் பூனை தப்பி ஓடிக் காட்டுக்குள் நுழைந்தது. காட்டுக்குள் தான் எப்படி உணவு தேடிக் கொள்வது என்று அந்த பூனை யோசித்தது.

அப்போது கழுத்தில் வளையத்துடன் பூனையைக் கண்ட மான் ஒன்று அதை அதிசயமாகப் பார்த்தது. இதைக்கண்ட மயில், "பூனையின் கழுத்தில் வளையம் இருப்பதைப் பார், இவர் ஒரு ஞானியாக இருக்க வேண்டும். நாம் இவரை நன்கு உபசரிக்க வேண்டும்" என்று கூறியது.

மானும் மயிலும் பேசிக்கொண்டதைக் கேட்ட பூனைக்கு நல்ல சந்தோசமாக இருந்தது. தனது உணவுப் பிரச்சினை தீர்ந்து விட்டதென அது எண்ணிக்கொண்டது.

கழுத்தில் வளையத்துடன் இருந்த பூனைக்கு காட்டில் இருந்த மிருகங்கள் நல்ல உணவுகளைக் கொடுத்து விருந்து படைத்தன. ஞானி என மற்ற விலங்குகள் நம்பிக்கொண்டிருப்பதை பூனை நன்கு பயன்படுத்திக்கொண்டு நல்ல உணவுகளை சாப்பிட்டு வந்தது.

ஒவ்வெரு நாளும் ஒவ்வொரு விலங்கு-பூனைக்கு உணவு கொடுத்து உபசரித்து ஆசீர்வாதம் பெற்று வந்தது. இவ்வாறு நாட்கள் கழிந்தபோது அந்தக் காட்டில் இருந்த விலங்குகள் தமக்கென அரசர் ஒருவரை தெரிவு செய்ய வேண்டுமென விரும்பின.

யாரை அரசராகத் தெரிவு செய்வதென விலங்குள் கூடி ஆராய்ந்தன. முற்றும் துறந்த ஞானியான பூனையாரை அரசராகத் தெரிவு செய்யலாமென பல விலங்குகள் யோசனை கூறின.

ஆனால் நரி மட்டும் அதற்கு இணங்கவில்லை. பூனை ஞானியின் சுயரூபத்தைப் பரிசீலிக்க நரியார் முடிவு செய்தார். அனைத்து விலங்குகளும் கூடியருந்த சந்தர்ப்பத்தில் நரியார் சில எலிகளைக் கூட்டிவந்தார்.

பூனைஞானி முன்பாக அந்த எலிகளை ஓட விட்டார். எலிகளைக் கண்ட பூனைக்கு தான் ஞானி வேடத்தில் காட்டு விலங்குகளை ஏமாற்றிப் பிழைக்கிறேன் என்பதை மறந்து எலிகளை துரத்திப்பிடிக்க முற்பட்டது.

பூனை பாய்ந்தபோது அதன் கழுத்தில் இருந்த வளையம் உடைந்தது. அத்தோடு பூனைஞானியின் சுயரூபம் அனைத்து விலங்குகளுக்கும் தெரிய வந்தது. காட்டிலும் தனது திட்டம் பலிக்காது போனதை எண்ணிப் பூனை தப்பியோடியது.

**த.கோகுலன், சாவகச்சேரி.**

## உரிமை யாருக்கு

தமிழில்: தி.த. நன்றி - ரிங்கிள்.



# சைக்கிள் எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது

சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டது மனித இனத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்து விட்டது. சக்கரத்தைப் பற்பல துறைகளிலும் பயன்படுத்த மனித இனம் முயற்சி எடுத்து பல வெற்றிகளையும் அடைந்திருக்கின்றது

சாலையில் செல்லத்தகுந்த நீராவியால் இயங்கும் மோட்டார்க் காரை உருவாக்குவதற்கான சோதனைகள் நடந்துகொண்டிருந்த அதே காலத்தில் இரு சக்கர சைக்கிளை அமைக்கும் சோதனையும் நடந்தது.



1817ஆம் ஆண்டு ஜேர்மனியைச் சேர்ந்த பாரன் வான் டிரெயிஸ் என்பவரால் முதன் முதலில் சைக்கிள் அமைக்கப்பட்டது. தன்னுடைய பெயரை வைத்து அவர் அதை 'டிரைஸைன்' என அழைத்தார். அதற்கு இரண்டு சக்கரங்கள் அமைந்திருந்தன சக்கரங்களை ஒரு மரத் தண்டு மூலம் இணைத்து அதன் மேல் சவாரி செய்ய நிலத்தில் காலை உதைத்து சைக்கிளை முன்னோக்கி நகர்த்த வேண்டியிருந்தது. திருப்பங்களில் திருப்புவதற்கு ஏற்றபடி அதில் முன் சக்கரத்துடன் ஒரு கைப்பிடி அமைக்கப்பட்டிருந்தது. இந்தச் சாதனம் மிகவும் விலை உயர்ந்ததாகவிருந்தது. மக்கள் இதை 'டாண்டி ஹோர்ஸ்' என்று அழைத்தார்கள். 1840ஆம் ஆண்டில் மார் மில்லன் என்பவர் இதில் பல முன்னேற்றங்களைச் செய்தார். பின் சக்கரத்துடன் பெடல்களையும் இணைத்தார்.

1865ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லால்லமென்ட் என்பவர் முன் சக்கரத்துடன் பெடல்களை இணைத்து புதிய மாதிரியான சைக்கிளை உருவாக்கினார். இச் சைக்கிளில் பிரயாணஞ் செய்பவர் பல உலுக்கங்களுக்கு உட்படவேண்டியிருந்தது. ஆகவே அதை மக்கள் 'போன் ஷக்கர்' அதாவது எலும்பு உலுக்கி என அழைத்தனர்.

அதன் சக்கரங்கள் உருக்கினால் ஆக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் முன் சக்கரத்தை சிறிது பெரிதாக்கினால் வேகம் அதிகமாகும் என சோதனைகள் மூலம் அறிந்து மிகச்சிறிய பின் சக்கரங்களும், பெரியமுன் சக்கரங்களும் கொண்ட சைக்கிள்களை வடிவமைத்தனர் இச் சைக்கிளில் சவாரி செய்பவர் திடீரென்று கீழே விழக் கூடிய ஆபத்து இருந்தது. இதனைத் தொடர்ந்து இச் சைக்கிளின் அமைப்பில் பல முன்னேற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இறுதியில் 1885ல் இன்று பயன்படும் நேர்த்தியான சைக்கிள் உருவாக்கப்பட்டது.

இச் சைக்கிள் இரு சக்கரங்களும் ஒரே அளவினதாக அமைக்கப்பட்டன. ஓட்டுபவருக்கு உட்கார ஒரு இருக்கையும் அமைக்கப்பட்டது. அதற்கு பெடல்களும் இருந்தன. காலஞ் செல்லச்செல்ல இந்த சைக்கிளின் அமைப்பும் பல முன்னேற்ற மாறுதல்களுக்கு உட்பட்டது.

இன்றோ சிரமமின்றி இயங்கும் மிக அழகான சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. குழந்தைகளுக்கு மூன்று சக்கர சைக்கிள்களும், சிறிய சைக்கிள்களும், பெண்களுக்கு ஏற்ற சைக்கிள்களும் தாராளமாய் கிடைக்கின்றன.

- சேரலாதன் -

## வண்ண வண்ணப் பூக்கள்

சின்னச் சின்னப் பூக்களாம்
சிறிய வண்ணப் பூக்களாம்
வண்ண வண்ணப் பூக்களாம்
வடிவான பூக்களாம்
வண்டு வந்து மொய்த்துமே
தேன் குடிக்கும் பூக்களில்
வண்ண வண்ணப் பூக்களே
நான் விரும்பும் பூக்களாம்!



பி.லக்கி, பருத்தித்துறை.

## வழியைக் காட்டுங்கள்

படத்திலுள்ள எலி பூனைகளிடம் இருந்து தப்பி வீட்டிற்குச் செல்வதற்கான வழியைக் காட்டிவிடுங்கள்.




## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப் படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்ய வேண்டியது இது தான்.

கீழ் உள்ள படிவத்தை பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப் படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவ துடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................

கற்கும் பாடசாலை :..............................

கற்கும் தரம் :..............................

வீட்டு முகவரி :..............................

பிறந்த திகதி :..............................

ஆர்வமுள்ள துறைகள் :..............................

:..............................

.............. ..........................
திகதி ஒப்பம்

.......................... ..........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## தகவல் களஞ்சியம்

☆ அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக அதிகளவில் பால் உற்பத்தி செய்யும் நாடு நம் அயலில் உள்ள இந்தியா தான். வருடத்திற்கு 58,000 மில்லியன் தொன் பால் அங்கு உற்பத்தி செய்யப் படுகிறது.

☆ சூரியனிலிருந்து கிடைக்கும் வெப்ப சக்தியை நீர் இறைப்பதற்கு பயன்படுத்தும் திட்டமொன்று இங்கிலாந்தின் உதவியுடன் எகிப்தின் பாலைவனப் பகுதியில் நடைபெற்று வருகிறது.

☆ புலிகளின் எலும்புகள் மருத்துவ குணமுடையவை என்ற நம்பிக்கை காரணமாக புலிகள் இன்று பெருமளவில் வேட்டையாடப்படுகின்றன. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலகில் மொத்தம் ஒருலட்சம் புலிகள் இருந்தன. ஆனால் இன்று அவை வெறும் 5,000 ஆகக் குறைந்து விட்டன.

☆ திருட்டுத்தனத்திலும், கொடிய சுபாவத்திலும் மரங்கொத்திக்கு ஒப்பான பறவை கிடையாது. பிற பறவைகளின் கூட்டிலுள்ள முட்டைகளைத் திருடித் தின்பதில் பலே கில்லாடிகள் இந்த மரங்கொத்திகள்.

☆ பூனைக்கு விரோதி எலி. எனவே நம் வீடுகளில் பூனையை வளர்த்தால் அதுவே போதும் எலிகளை ஒழித்துக்கட்டி விடலாம் என்று நினைக்கின்றார்கள். இது தவறு. சில பூனைகள் திறமையான எலி கொல்லிகள் தான். ஆனால் வெகு நாட்களாக ஒரே அறையில் வசிக்கும் எலிகளும் பூனைகளும் காலக்கிரமத்தில் சினேகிதர்களாகி விடுகின்றன எனக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

சிந்தனைக்கு

'ஊர் இரண்டுபட்டால்
கூத்தாடிக்கு கொண்டாட்டம்!

தமிழ்ப் பழமொழி.

# நமது நோக்கு

## மீண்டும் பிரித்தாளும் தந்திரம்

தமிழ் - முஸ்லீம் இனங்களிடையே காலத்துக்கு காலம் பிரித்தாளும் சூழ்ச்சியைத் தூண்டிவிட்டு, அதனூடாக அரசியல் இலாபம் தேடமுனையும் பேரினவாதச் சிந்தனைப் போக்கு மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தின் கீழ் வருமானால், அங்கு வாழும் முஸ்லீம் மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதனை தடுக்க முடியாது என ஜனாதிபதி செயலகத்தில் இருந்து நேற்று முன்தினம் விடுக்கப்பட்ட அறிவித்தலே இச்சிந்தனை வெளிப்பாட்டை இனம்காட்டுகின்றது.

சமாதான முயற்சிகள் தொடர்பாக அவநம்பிக்கையுடனும், குழப்பகரமானதுமான அறிக்கைகளின் தொடர்ச்சியாக வெளிவந்துள்ள இந்த அறிவித்தலானது அமைதி முயற்சிகள் அடுத்த கட்டத்திற்கு நகர்வதைச் சகித்துக் கொள்ளாத போக்கினையே சுட்டிநிற்கின்றது.

வட-கிழக்கின் நிரந்தரமான, நீடித்த அமைதிக்கு தமிழ், முஸ்லீம் இனத்தவர்களிடையே ஒற்றுமையும் சகிப்புத்தன்மையும், புரிந்துணர்வும் வேண்டி நிற்கின்ற இக்கால கட்டத்தில், இத்தகைய செயல்கள் திட்டமிட்டு இனவிரோதத்தை உருவாக்குபவையாக உள்ளன.

கிழக்கிலே அண்மைக்காலமாக நடைபெற்ற சில சம்பவங்களை வைத்துக்கொண்டு, அவற்றை ஊதிப் பெரிதாக்கும் வேலைகளை, முஸ்லீம் சமூகத்தினரில் சிலரைக்கொண்டே செய்விப்பதும்,

அதிகாரப் பரவலாக்கம், ஆட்சி பகிர்ந்தளிப்பு போன்ற விடயங்களெல்லாம் பேசப்பட வேண்டிய கட்டத்திற்கு இன்னும் தூரம் இருக்கும்போதே, முஸ்லீம்களுக்கான தனியலகு என்ற பேச்சு தொடங்குவதுமென அங்கும் இங்குமாக எழும் குழப்பங்களின் பின்னணியாகவே இந்தச் செய்திகளின் மூலம் கருத வேண்டியுள்ளது.

வடக்கு- கிழக்கிலே நிரந்தரமான; அமைதி தோன்ற வேண்டுமாயின்-அது விடுதலைப் புலிகளிடம் ஆட்சியதிகாரம் கையளிக்கப்படுவதன் மூலமாகவே சாத்தியமாகும் என்பதும், தீர்வு நோக்கிய எத்தகைய நகர்வுகளும் முஸ்லீம் மக்கள் தமிழினத்துடன் பங்கேற்பதன் மூலமே சாத்தியமாகும் என்பதும் அரசாங்கத் தரப்பிலும், சர்வதேச அளவிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் -

ஜனாதிபதி செயலகத்தின் நிலைப்பாடானது அமைதி முயற்சிகளுக்கு எதிரான போக்கினையே பிரதிபலிப்பதை, நியாயமான சிந்தனையுள்ள எவரும் இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

எனவே - இத்தகைய சதிச் செயல்களிலும், பிரித்தாளும் தந்திரோபாயங்களிலும் சிக்கிவிடாது- தமிழ், முஸ்லீம் மக்கள் யதார்த்தத்தை உணர்ந்து கொண்டவர்களாக சகோதர உணர்வுடன் செயற்படுவதே - வட, கிழக்கு மாகாணத்தில் அமைதிச்சூழலை என்றும் நீடித்திருக்க உதவும் என்பதை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைத்தாற் போல என்றிராது - பேச்சு வார்த்தை மேசையில் விடுதலைப்புலிகளின் கரத்தைப் பலப்படுத்துவதன் மூலமே முஸ்லிம் மக்களுக்கும் நீதியான தீர்வு கிடைக்கும் என்பதை முஸ்லிம் தலைமைத்துவங்களும் கருத்தில் கொள்ள வேண்டும்.

# கடற்பாதையூடாகப் புதிய வள்ளங்கள் எடுத்துவர வடமராட்சியில் அனுமதி!

வடமராட்சி கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடும் கடற் தொழிலாளர்கள் தமது உபகரணங்களை கடற்பாதையூடாக எடுத்து வருவதற்கு கடந்த 9ஆம் திகதி முதல் படையினர் நிபந்தனையுடன் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த காலங்களில் கடற் தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் புதிய வள்ளங்கள், கட்டு மரங்கள் என்பனவற்றை தொழிலில் ஈடுபடுத்தவோ, கரைக்குக் கொண்டுவரவோ படையினர் அனுமதி வழங்கவில்லை.

ஆனால்- தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ் நிலைகளை அடுத்து இதுவரை வன்னிப்பெருநிலப்பரப்பில் இடம்பெயர்ந்திருந்து தற்போது யாழ். குடாநாட்டில் சொந்த இடங்களில் மீளக் குடியமர வருவோர் தமது தொழிலுக்கான உபகரணங்களை முகமாலையூடான தரைவழிப் பாதையால் கொண்டு வருவதற்கான செலவுகள் அதிகரித்துள்ளமையால் இதனைக் கருத்தில் கொண்டு படையினர் கடல்மார்க்கமாக தொழிலுக்கான உபகரணங்களை எடுத்து வர அனுமதி வழங்கியுள்ளதோடு ஆழ்கடலில் மீன் பிடிக்கவும் அனுமதிக்கப் பட்டிருக்கிறது.

எனினும் கடல்வழியாக உபகரணங்களைக் கொண்டு வரவோர் 12 மணிக்கு முன்னராக அந்த அந்தப் பகுதி இராணுவ முகாம்களில் அனுமதி பெறப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (23)

## நவீன வடிவமைப்புடன் புதிய தேசிய அடையாள அட்டை

(கொழும்பு)

அதிநவீன தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தினாலும் எந்த வித மாற்றங்களையும் செய்ய முடியாத வகையில் புதிய தேசிய அடையாள அட்டைகளை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிமுகம் செய்ய இருக்கிறது.

சட்டவிரோத நடவடிக்கைகளில் போலி அடையாள அட்டை உபயோகித்து வருவது தெரியவந்திருக்கிறது. இதனை கட்டுப் படுத்தும் வகையிலேயே நவீன வடிவமைப்புடன் கூடிய தேசிய அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்படவிருக்கிறது.

ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் இந்த நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வார் எனவும் இதற்கு தனியார் துறையும் உதவ இருப்பதாகவும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்திருக்கிறது.

## வீதியைக் கடக்க முயன்றபோது மோட்டார் சைக்கிள் மோதியவர் 10 தினங்களின் பின் மரணம்!

(வடமராட்சி)

சாவகச்சேரி பகுதியில் வீதியைக் கடக்கமுற்பட்ட வேளை மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானவர் 10 தினங்களின் பின் சிகிச்சை பலனளிக்காது மரணமானார்.

கடந்த 27ஆம் திகதி சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் நடைபெற்ற இவ் விபத்தில் இதே இடத்தை சேர்ந்த நாகமுத்து வீரசிங்கம் (வயது 52) என்பவர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

10 தினங்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நபர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் கடந்த திங்களன்று மரணமானார்.

இச்சம்பவத்தில் மோட்டடார் சைக்கிளில் வந்த நபர் எனக் கருதப்படும் குணசிங்கம் சாயிசங்கர் என்பவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை விளக்கமறியலில் வைக்க உத்தர விடப்பட்டுள்ளது. (23)

# மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி கொழும்புத்துறை மக்கள் சார்பில் கோரிக்கை!

## இரு வாரங்களில் பதில் தராவிட்டால் போராட்டம்

கொழும்புத்துறை மக்களின் மீளக்குடியமர்விற்கு வழி செய்யுமாறு கோரி கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், இந்து இளைஞர் மன்றம், கொழும்புத்துறை சனசமூக நிலையம் ஆகியன இணைந்து மக்களின் கையொப்பங்களுடன் அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரியிடம் மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்.

யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் சார்பில் இது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை பகுதி மக்கள் நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலை காரணமாக 2000ஆம் ஆண்டில் தமது சொந்த இருப் பிடங்களை விட்டு வெளியேறினார்கள். தற்போது நாட்டில் தோன்றியுள்ள அமைதியான சூழ்நிலையிலும் சொந்த வீடுகளில் அவர்கள் மீளக் குடியமர முடியாது வாழ்ந்து வருகின்றனர்.

பல்வேறு சொல்லொணாத் துன்பதுயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்துவரும் மக்கள் சுதந்திரமாக சொந்த வீடுகளில் வாழ்வதற்குரிய வசதிகளை ஏற்படுத்தி தந்துதவுமாறு தங்களை அன்போடு வேண்டுகிறோம் எனவும் - எமது கீழ் கண்ட கோரிக்கைக்கு ஆக்கபூர்வமான தீர்வினைப் பெற்றுத் தருமாறும் கொழும்புத்துறை வாழ் மக்கள் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ள அம்மகஜரில்- கொழும்புத்துறை இந்து இளைஞர் மன்றச் செயற்பாடுகளை உடன் ஆரம்பிக்க வசதியாக மன்றக் கட்டடத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை வேறு இடம் நகர்த்தி மன்றக் கட்டடத்தை பாவனைக்கு பெற்றுத் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன்- கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்துக்கு செல்லும் மாணவர்களின் நலன் கருதியும் விநாயகர் ஆலயம் செல்லும் அடியார்களின் நலன் கருதியும் இராணுவத்தினரால் மூடப்பட்டுள்ள விபுலானந்தன் வீதியை போக்குவரத்துக்காக உடனடியாகத் திறந்து விடுமாறு கோரப்பட்டுள்ளது.

மேலும் விபுலானந்தன் வீதி, சுவாமியார் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை இடம்நகர்த்தி அந்த வீடுகளை மக்களின் மீளக் குடியமர்விற்கு பெற்றுத் தருமாறும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை மகா வித்தியாலய மாணவர்களின் நலன் கருதியும், கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தை மீள ஆரம்பிப்பதற்கு வசதியாகவும், கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயம் செல்லும் அடியார்களின் நலன் கருதியும் இந்த பகுதிகளைச் சுற்றியுள்ள வீடுகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை வேறு இடத்துக்கு மாற்றுமாறும் கொழும்புத்துறைப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகள், மிதிவெடிகளை அகற்ற துரித நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

இதே போன்று கொழும்புத்துறை சனசமூக நிலையம், இந்து இளைஞர் மன்றமும் மக்களின் தேவைகளையும், அவர்களின் துன்பங்களையும் எடுத்து விளக்கக் கூடியவகையில் கருத்துக்களை முன் வைத்து மகஜர் சமர்ப்பித்துள்ளனர்.

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தினரால் அனுப்பப்பட்டுள்ள மகஜரில், இந்தப்பகுதி மக்களின் கோரிக்கைகளுக்கு இரு வாரகாலத்தினுள் தீர்க்கமான பதில் தரப்படாத பட்சத்தில் மக்களின் வெகுஜனப் போராட்டங்கள் மூலம் கொழும்புத்துறையில் நிலை கொண்டுள்ள படையினரின் செயற்பாடுகள் முகாம்களுக்குள் முடக்கப்படும் சூழ் நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதனை மனவருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம் எனவும் அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மின்சாரசபைத் திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேறியது

### வாக்கெடுப்பை மு.கா. புறக்கணிப்பு

மின்சாரசபைத் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் 25 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இது தொடர் பான வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம் பெற்றிருந்தது.

முன்னதாக இந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படுவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருக்க வேண்டும் எனவும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் உயர்நீதிமன்றம் கூறியிருந்தது.

மேற்படி சட்டமூலத்தில் காணப்பட்ட சர்ச்சைக்குரிய விடயங்களில் திருத்தம் செய்யப்பட்டு நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக 108 வாக்குகளும், எதிராக 83 வாக்குகளும் கிடைத்திருந்தன.

வாக்கெடுப்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை. சட்டமூலத்துக்கு ஆதரவாகத் தமிழ் தேசிய கூட்டமைப்பு, புளொட், ஈ.பி.டி.பி ஆகியனவும் வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யுத்த பாதிப்புக்கான உதவிக்காக ஜப்பான், நோர்வேயில் கூட்டங்கள்!

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட் டுள்ள இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான கூட்டங்கள் ஜப்பானிலும் நோர்வேயிலும் நடத்தப்படவுள்ளன.

ஜப்பானியத் தலைநகர் டோக்கியோவிலும், நோர்வே தலைநகர் ஒஸ்லோவிலும் இந்தப் பேச்சுக்கள் நடைபெறும் என நிதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கொழும்பில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

## கடற்கரையோரத்தில் அகற்றப்படாத மண் அரண்களில் பொறிவெடிகள்

(வடமராட்சி)

பருத்தித்துறை கரையோரத்தில் இராணுவத்தினர் வெளியேறி இரண்டு வருடங்கள் ஆகியும் இராணவத்தினரால் அமைக்கப்பட்ட மண் அணைகள் அகற்றப்படாமல் உள்ளதால் அப்பகுதியில் மிதிவெடி அபாயம் இன்னமும் நீங்கவில்லையெனப் பருத்தித்துறைக் கரையோர மக்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். குடாநாட்டைப் படையினர் கைப்பற்றியபோது கடல் வழியே புலிகள் குடாநாட்டுக்குள் ஊடுருவி விடுவார்கள் என்ற அச்சத்தினால் கரையோரப்பகுதியில் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இதன் போது இராணுத்தினரால் பருத்தித்துறை கிழக்குப் பகுதியில் மூர்க்கம், வல்லிபுரம் பகுதியூடாக தென்மராட்சிப் பிரதேசம் வரை பாரிய மண் அணைகள் அமைக்கப்பட்டு மிதிவெடிகளும் பொறிவெடிகளும் புதைக்கப்பட்டு காவலரண்களும் அமைக்கப்பட்டிருந்தன.

இதன் பின்னர் தும்பளை கிழக்கு, கற்கோவளம், வராத்துப்பளை ஆகிய பகுதிகளை அண்டிய பகுதியில் இருந்து படையினர் வெளியேறி இரண்டு வருடத்திற்கு மேலாகியும் இன்னமும் மண் அணைகளோ மிதிவெடி பொறிவெடிகளோ அகற்றப்படவில்லை.

இதனால் மேய்ச்சலுக்காகச் செல்லும் கால்நடைகள் மிதிவெடிகளில் சிக்கி கால்களை இழக்கும் சம்பவங்கள் அடிக்கடி இடம் பெற்று வருகின்றது.

இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட கால்நடைகள் கால்களை இழந்தும், இறந்தும் உள்ளதுடன் இரு பொதுமக்களும் கால்களை இழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (23)

# காஷ்மீரிய மக்கள் மீண்டும் ஒரு தடவை ஜனநாயகத்தின் பெயரால் ஏமாற்றப்படுகின்றனர்



வாஜ்பாய்

இந்தியாவின் தலைவிதியைத் தீர்மானிக்கும் மாநிலங்களில் ஒன்றான காஷ்மீரில் நான்காவது கட்ட வாக்குப் பதிவும் பூர்த்தியாகிக் கொண டிருக்கிறது. ஏற்க்குறைய பாகிஸ்தானின் எதிர்ப்பையும், சவாலையும் எதிர்கொண்டு இந்தியாவின் ஆட்சியிலுள்ள தலைமை காஷ்மீர்த் தேர்தலை நடாத்தியுள்ளது. வன்முறைகள், கொலைகள் எறிகணைத் தாக்குதல்கள் எனப் பலவற்றை இந்தியாவின் ஆளும வர்க்கத்திற்கு எதிராக தீவிரவாத அமைப்புக்கள் காஷ்மீர்



முஷாரப்

மக்கள்மீது மேற்கொண்டபோதும் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது. ஜனநாயக விரும்பிகள் எல்லோரும் தங்கள் நோக்கங்களை நிறைவு செய்வதற்காகவே தேர்தலை எதிர் கொண்டார்களே அன்றி காஷ்மீரிய மக்களின் சுயநிர்ணயத்தையும், சுதந்திரத்தையும் அடைவதற்காக அல்ல என்பதே தேர்தல் அவதானிப்பின் பிரதிபலிப்பு ஆகும். இதனை சற்று விரிவாக நோக்குவோம்.

## வாஜ்பாய் அரசாங்கமும் பி.ஜே.பி.யும்.

காஷ்மீர் தேர்தல் வாஜ்பாய் அரசாங்கத்திற்கு பெரும் வெற்றி என்றும், காஷ்மீரிய மக்கள் இந்தியாவுடன் இணைந்து வாழ்வதற்கு தங்கள் விருப்பத்தை தேர்தல் மூலம் பாகிஸ்தானுக்கும், உலகத்திற்கும் வெளிப்படுத்தி விட்டார்கள் என ஐரோப்பிய பயணத்திலும், ஐரோப்பிய நாடுகளிலும் பிரச்சாரம் செய்து கொண்டு வருகின்றார் வாஜ்பாய். அவரது அரசாங்கத்திற்கு முதல் தேவையும், அவசியமும் அதுவாகவே உள்ளது. காஷ்மீர் மக்கள் இந்தியாவை விட்டுப் பிரிந்து விடுவார்களோ அல்லது பாகிஸ்தானுடன் சேர்ந்து விடுவார்களோ என்பதே அவர்களின் கவலையும், வேதனையுமாகும். அதனை உலகத்திற்கு வெளிக்காட்டவே தேர்தலை பல



காஷ்மீர் வாக்குப் பதிவில் ஒரு காட்சி.

நெருக்கடிக்குள்ளும் வாஜ்பாய் அரசாங்கம் நடத்தி முடித்துள்ளது.

காஷ்மீர் எல்லையூடாக பாகிஸ்தானின் ஊடுருவல் ஒரு புறம், சர்வதேச படைகளின் வருகையை விரும்பும் பாகிஸ்தானும், அமெரிக்காவும் மறுபுறமாக ஜம்மு காஷ்மீர் பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டிருந்தது. மேற்குலகத்திற்கு வாஜ்பாய் கொடுத்த சாட்டை அடி என்றும் இத்தேர்தலை கருதலாம். ஏனெனில் மக்கள் ஆட்சியைப் போதிக்கும மேற்குலக ஜனநாயக விரும்பிகளுக்கு காஷ்மீரில் பயங்கரவாதமும், தீவிர வாதமுமே பலமாக உள்ளது என்ற எண்ணம் ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதலுக்குப் பின்னால் ஏற்பட்டிருந்தது. அதனை சாட்டாகக் கொண்டு காஷ்மீருக்குள் புகுவதே அமெரிக்க-பிரிட்டன் கூட்டுப் படைகள் சர்வதேசப் படையாக நுழைவதற்கு திட்ட

மிட்டிருந்தன. அதனை விளங்கிக் கொண்ட வாஜ்பாய் அரசாங்கம் முறியடிக்க - அமெரிக்கா பிரிட்டன் இணைந்து உலகத்திற்குப் போதிக்கும் ஜனநாயகம் என்ற அஸ்திரத்தைப் பாவித்து தேர்தலை நடத்துவதில் வெற்றி கண்டுவிட்டது. இத்தேர்தல்மூலம் அங்கு மக்கள் ஆட்சி நிலவுகின்றதென்பதையும் ஜம்மு - காஷ்மீர் பயங்கரவாதத் திடமில்லை இந்தியர்களின் கட்டுப்பாட்டில் உண்டு என்பதையுமே வாஜபாய் அழுத்தம்திருத்தமாக தேர்தல் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

பாரதீய ஜனதாக் கட்சியைப் பொறுத்தவரை அகண்ட பாரதம் என்ற எதிர்கால நோக்கத்திற்கு ஒரு படியாக இத்தேர்தலை கருதுகிறது. மேலும் இத்தேர்தல் வாயிலாக பி.ஜே.பி. எதிர்காலத்தில் காஷ்மீரின் முழுப்பகுதியையும் தனது ஆளுமைக குட்படுத்தலாம் என்ற எண்ணத்துடனும் செயல்படுகின்றது. அதற்கேற்பவே கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றங்களை செய்துள்ளதுடன் கட்சியின் பிரச்சாரத்தை காஷ்மீர நோக்கி மேற்கொண்டும் வருகிறது. காஷ்மீர் பண்டிட் பிராமணர்களை கணிசமாகக் கொண்ட மாநிலம் என்பதும், காங்கிரஸ் கடந்த காலத்தில் ஏற்படுத்திக் கொண்ட முரண்பாடான அரசியல் நடைமுறையினால் அதன் வாக்குப் பலம் பலவீனப்பட்டிருப்பதாகவும் பாரதீய ஜனதா செயல் படுகிறது. எதிர்காலத்தில் காஷ்மீரிய தேசிய மாநாட்டுக் கட்சியைக் கூட ஓரங்கட்டலாமென கணக்குப் போட்டு பாரதீய ஜனதா கட்சி களமிறங்கியுள்ளது. வெல்லும் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொள்வதென மத்திய அரசு அறிவித்தாலும் பாரதீய ஜனதா தனித்து சில தொகுதிகளில் போட்டியிட்டுள்ளது.

## அப்துல்லா குடும்பம்.

காஷ்மீரியரின் அரசியலில் 1950களிலிருந்து பிரிக்க முடியாத ஆதிக்கத்தை தக்கவைத்து வரும் குடும்பமே அப்துல்லா பரம்பரை. தற்போது நடைபெற்ற தேர்தலில் மூன்றாவது பரம்பரை நேரடி அரசியலில் ஈடுபடுவதைக் காணமுடிகிறது. சுதந்திர காஷ்மீரின் ஆட்சியாளனான ஹரிசிங் அரசியல் அஸ்தமனத்தை தொடர்ந்து தீவிர இடதுசாரிப் போக்குடையவரும், காஷ்மீரிய சுயாட்சிக்கான போராட்ட வீரனாகவும் விளங்கிய ஷேக் அப்துல்லா முதல் இன்று வரை அப்துல்லா பரம்பரையே காஷ்மீரை ஆளுகின்றது. 1953ஆம் ஆண்டு ஷேக் அப்துல்லா அரசாங்கம் கலைக்கப்பட்ட போதும் 1975

இல் ஷேக்-இந்திரா உடன்பாடு காஷ்மீரில் காங்கிரஸின் பலத்தை மட்டுமன்றி ஷேக் அப்துல்லாவை நிரந்தர அரசியல் தலைவராக மாற்றியது. பின்னர் 1980களின் ஆரம்பத்தில் முதலமைச்சரான பாரூக் அப்துல்லா 2002வரை நிலையான அரசியல் தலைவராக விளங்கினார். தற்போது மீண்டும் பாரூக்கின் வாரிசான ஓமர் அப்துல்லா தேசிய அரசியலை துறந்து பிராந்திய அரசியலில் குதித்துள்ளார். எதிர்பார்த்தளவு வெற்றியை அடையும் கட்சியாக தேசிய மாநாட்டுக் கட்சி அமைவதுடன் - ஓமர் 1998,1999களில் நிகழ்நத லோக்சபா தேர்தல்களில் முறையே 30சதவீத வாக்குகளையும், 11.9சதவீத வாக்குகளையும் பெற்று சிறிநகர்த் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத் தக்கது.

காங்கிரஸ் உடன் கூட்டு வைத்திருந்த அப்துல்லா பரம்பரை தற்போது இந்து மதவாதக் கட்சியான பாரதீய ஜனதாவுடன் உறவைப் பேணுகிறதென்பதே அதன் அரசியல் நோக்கத்தை புரிந்து கொள்ளப் போதுமானது. ஊழல், மோசடி மட்டுமன்றி அப்துல்லாக் குடும்பச் செல்வாக்கை நிர்வாக அமைப்புக்குள்ளும் (Nepotism) மற்றும் அதிகார பீடங்களின் தலைமைப் பதவிகளுக்கு அமர்த்துவது போன்ற நிலைகளை பாரூக் அப்துல்லா ஏற்படுத்தி வருகின்றார். காஷ்மீரிய மக்களின் சுயாட்சித் திட்டம் பற்றி கடந்த வருடங்களில் பாரூக் அப்துல்லா ஏற்படுத்திய குழப்பம் பாரதீய ஜனதாவாலும் அதன் தலைமையிலான அரசாங்கத்தாலும் நிராகரிக்கப்பட்டது மட்டுமல்லாது அவரே முன்வைத்த திட்டம் போலியானதாகவே அமைந்திருந்தது கவனிக்கத்தக்கது. ஏனெனில் பண்டிட் பிராமணர்களோ, காஷ்மீரிய மக்களோ சுயாட்



தனயன் ஓமரும் தந்தை பாரூக் அப்துல்லாவும்.

சித் திட்டத்தை பெருமளவுக்கு வரவேற்காத போக்கும், பழைய ஹரிசிங் காலத்தில் நிகழ்ந்த அதே அமைப்பிலான சுயாட்சித் திட்டத்தைக்கூட பாரூக் முன்வைத்த திட்டத்தில் அமைந்திருக்காததும் அதன்

# தென்னாசிய அரசியற் கலாசாரத்தில் தற்போதைய காஷ்மீர்த் தேர்தல்

மீதான சந்தேகத்தை தீவிரப்படுத்துகின்றது. பாரூக்கின் சுயாட்சித் திட்டம் ஏறக்குறைய தேர்தல் பிரச்சாரம் போன்றும், இழந்து போன அரசியல் அங்கீகாரத்தை கட்சிக்கு மத்திய அரசிடம் பெற்றுக் கொடுப்பது போன்றே அமைந்திருந்தது. மேலும் பாரூக் குடும்ப பரம்பரையின் வாரிசுக்கான அரசியலை மத்தியிலும், மாநிலத்திலும் உறுதி செய்கின்ற வேலைத திட்டத்தையே சுயாட்சித் திட்டத்தினூடாக பாரூக் அப்துல்லா நகர்த்தினார்.

ஆனால் இந்திய மத்திய அரசு தன் பலத்தையும், அதிகாரப் பிரமையையும் காட்டுவதற்கான நடவடிக்கையாகவே சுயாட்சித் திட்டத்தை நிராகரித்தது. இது எதிர்கால இந்தியாவின் நலனுக்கு ஆபத்தானதாகவே அமையப்போகிறது. உலகில் பாதி சமஷ்டி நீண்டகாலம் நிலை பெறுவதில்லை என்பது பல உதாரணங்கள் கடந்த நூற்றாண்டில் நிகழ்ந்துள்ளன. அதே நிலை இந்தியாவுக்குள் பலவீனமான சூழல் எழும்போது ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம். இந்திய ஆளும் வர்க்கம் அதிகார அலகை பகிர்வது பற்றியே சிந்திக்காத தன்மையை காஷ்மீர் சுயாட்சித் திட்டத்தை நிராகரித்ததன்மூலம் விளங்கிக்கொள்ள முடிகிறது.

## பாகிஸ்தான்

பாகிஸ்தானைப் பொறுத்தவரை காஷ்மீரில் தேர்தல் வெற்றிகரமாக நடந்து முடிந்தமை தோல்வியே. முஷராப்க்கும், அவரது அரசாங்கத்திற்கும் நெருக்கடியை ஏற்படுத்தக் கூடியதே. பாகிஸ்தானினால் தேர்தலை முழுமையாக குழப்ப முடிய

வில்லை. வன்முறைகள் நிகழ்ந்த போதும் படிப்படியாக பாதுகாப்பு படைகளை நான்கு கட்டத் தேர்தலின்போதும் உரிய தொகுதிகளில் குவித்து தேர்தலை இந்திய ஆளும் வர்க்கம் பூரணமாக்கிவிட்டது. இதனால் காஷ்மீருக்குள் ஊடுருவலை நிகழ்த்துவது கடினமானதுடன் சர்வதேச நிலையிலும் பாகிஸ்தானை விட இந்தியாவுக்கான ஆதரவை அல்லது அனுதாபத்தை அதிகப்படுத்தியுள்ளது. வேண்டுமாயின் அமெரிக்க - பிரித்தானியக் கூட்டு, பாகிஸ்தானுடன் நெருக்கமான உறவைப் பேணலாமே அன்றி ஏனைய நாடுகள் இந்தியா பக்கமே அதிக நெருக்கத்தை காட்ட இத்தேர்தல் வழி வகுத்துள்ளது. பாகிஸ்தானிலிருந்து இயங்கும் தீவிரவாத அமைப்புக்கள் காஷ்மீரிய மக்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பவர்களாக கருதி விடமுடியாது. காரணம் தேர்தலைக் குழப்ப மக்களை கொல்வதற்குக் கூட அவர்கள் தயங்கவில்லை என்

பதிலிருந்து அது புலனாகிறது. மேலும் மக்கள் விரும்புகின்ற அம்சங்களை அவர்கள் பல சந்தர்ப்பத்தில் நிராகரித்து வந்துள்ளனர். இதனால் ஜம்மு - காஷ்மீரிய மக்களின் எதிர்ப்பையும், வெறுப்பையும் சம்பாதித்தது மட்டுமல்லாது பாகிஸ்தானின் இலக்கான ஜம்மு - காஷ்மீரை கைப்பற்றுவதென்பதையும் முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டன.

## காஷ்மீர் மக்களின் நிலைப்பாடு.

காஷ்மீர் விடுதலைக்கான போராட்டம் ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு மேற்பட்டதாக நிகழ்ந்து வருகிறது. மத அடிப்படையில் எழுந்த முரண்பாடு வன்முறைக் கலாசாரமாக விரிவடைந்து இரு நாடுகளையும் கடந்த சர்வதேச பரிமாணத்தைக் கொண்டுள்ளது. மக்கள் நீண்ட கால போராட்ட வழிமுறையால் வெறுப்படைந்திருப்பதுடன் தமது தேவைக்கும், விடுதலைக்கும் உட்படாத போராட்ட அணுகுமுறையை வெறுக்கத் தொடங்கி விட்டதை காணமுடிகிறது. குறிப்பாக பெருளாதார அபிவிருத்தி, வன்முறையற்ற வாழ்வு, ஜனநாயக தேர்தல் போன்ற சுமுகமான, சுதந்திரமான வாழ்க்கை முறைமையையே அவர்கள் விரும்புகின்றனர். அதனை அடிப்படையாகக்கொண்டு MORI என்ற நிறுவனம் (Market Research Company International) ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் சில பிரதேசங்களில் நிகழ்த்திய கருத்துக் கணிப்பின் அடிப்படையில் அதனை விளங்கிக் கொள்ள முடியும். நகரங்களைக் காட்டிலும், கிராமங்களை அதிகமாக முதன்மைப்படுத்தி நடத் தப்பட்ட மதிப்பீட்டின்படி சமாதானமான சமூக வாழ்க்கை முறைமையே அவர்கள் விரும்புவது புலனாகிறது. 52% மக்கள் இந்தியாவும் - பாகிஸ்தானும் போர் புரிவதை நிராகரிப்பதுடன் காஷ்மீருக்கு நிரந்தரமான தீர்வு

அவசியமானதென கூறுகின்றனர். வன்முறை தொடரும்போது ஜனநாயக தேர்தல்கள் எவையும் நியாயமான முடிவை தர வல்லவையாக அமையாது என 65% மக்கள் கருதுகின்றனர். அதைவிட 65% மக்கள் ஜம்மு - காஷ்மீர் பகுதிக்குள் அல்லது எல்லையில் வெளிநாட்டுப் படைகளின் தலையீட்டினால் எந்தப் பயனும் ஏற்புடைய வாய்ப்பு இல்லை எனக்கூறுகின்றனர். இது அமெரிக்க - பரிட்டன் தலையீட்டுக்கு எதிரான உணர்வைக் காட்டுவதற்கு நடத்தப்பட்ட மதிப்பீடு போன்றும் காணப்பட வாய்ப்புக்கள் உண்டு. குறிப்பாக ஸ்ரீநகர் பகுதி மக்களின் 2/3 பங்கினர் கடந்த 10ஆண்டுகளாக பாகிஸ்தான் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லை என்பதுடன் பாகிஸ்தான் தலையீடு ஆபத்தானது என்ற முடிவுக்கு வந்துள்ளனர். அதேவேளை 15% மக்கள் பாகிஸ்தானை ஆதரிப்பவர்களாகவும் காணப்படுகின்றனர் என்பதை கவனத்தில் கொள்ளுதல் அவசியம். 50% மக்கள் புதிய அரசியல் கட்சியொன் றின் வருகையை விரும்புவதுடன் அக்கட்சியினால் தான் நிரந்தர தீர்வை ஏற்படுத்த முடியும் எனவும் நம்புகின்றனர். பெரும்பாலான மக்கள் வழங்கிய பேட்டிகளில் காஷ்மீர் மாநிலத்திற்காக முன்வைக்கப்பட வுள்ள எந்தத் தீர்வும் காஷ்மீரின் தேசிய அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டே அமைதல் வேண்டும் என கூறியுள்ளனர்.

முடிபாக பொருளாதார அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு என்பவற்றை ஏற்படுத்துவதுடன் சுதந்திரமான ஜனநாயக தேர்தலூடாக மக்களாட்சியை ஏற்படுத்த வேண்டுமென காஷ்மீர் மக்கள் கேட்டுள்ளனர். மேலும் நேரடியாக இந்தியாவுக்கும்-காஷ்மீரிய மக்களுக்குமான அரசியல் யாப்பு ஒன்று வரையப்படுவதுடன், இராணுவ வன்முறைக் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வருதல் வேண்டும் எனவும் மதிப்பீட்டின்போது மக்கள் கேட்டுக்

கொண்டனர். 88%மான மக்கள் பாகிஸ்தான் - இந்திய எல்லைக் கோடுகளில் போடப்பட்டுள்ள தடைகளை வர்த்தகத்திற்காகவும், போக்குவரத்திற்காகவும், கலாசார பரிவர்த்தனைக்காகவும் திறந்துவிடப்பட வேண்டுமெனக் கோருகின்றனர். 55%மான மக்கள் கூடுதல் சுயாட்சிப் பிரதேசமாக காஷ்மீரை இந்திய, பாகிஸ்தான் அரசாங்கங்கள் உருவாக்க வேண்டுமென விருப்பத்தினை வெளிப்படுத்தியுள்ளனர்.

கே.ரீ.கணேசலிங்கம்

காஷ்மீர் தேர்தலிலும் சராசரியாக 40%மான வாக்குகள் பதிவாகியுள்ளதாக அறிக்கைகள் மூலம் அறிய முடிகிறது. அதிகமான வாக்குகள் பதிவாகிய தேர்தல் தொகுதிகளில் ஒன்றாக 'கார்கில்' அமைந்துள்ளது. இத்தேர்தல் எந்த அரசியல் கட்சியை ஆட்சியில் அமர்த்தினாலும் மக்களின் நலன்களை விட அரசியல் தலைமைகளினதும், கட்சிகளினதும் நலன்களே முதன்மையானதாக நோக்கப்பட வாய்ப்புண்டு. காஷ்மீர் போன்ற போராட்டங்களை நடாத்தும் நாடுகளில் மக்களும் போராட்ட அமைப்புக்களோ அல்லது ஆதரவான மிதவாதக் கட்சிகளோ அன்னியப்படுவதற்கும் காரணம் அதுவாகவே உள்ளது. மக்களுக்காக தொடங்கும் போராட்டங்கள் மக்களை சுரண்டுவதும், நெருக்கடிக்குள்ளாக்குவது மட்டுமன்றி மக்களின் பிரச்சினைகளையும், சுதந்திரத்தையும் மதிக்கத் தவறுவதனால் அப்படியான போராட்டங்களையும், போராட்ட அமைப்புக்களையும் ஆளும வர்க்கங்கள் இலகுவாக தோற்கடித்து விடுகின்றன. ❖

# அமெரிக்காவுடன் ஆயுத ஒப்பந்தம் எதனையும் நாம் செய்யவில்லை

## பாராளுமன்றில் பிரதமர் ரணில்

(கொழும்பு)

அணிசேரா நாடுகளின் கொள்கைக்கு மாறாக எந்தவொரு ஒப்பந்தத்தையும் அரசாங்கம் செய்து கொள்ளாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கைத் துறைமுகம், விமான நிலையம் மற்றும் விமான எல்லைகளை அமெரிக்கா பயன்படுத்துவதற்கான அதிகாரங்களை வழங்கி அமெரிக்காவிடம் இருந்து யுத்த உதவிகளைப் பெறுவதாக ஊடகங்கள் வெளியிட்ட செய்தி தொடர்பாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரான பத்தேகம சுமித்த தேரர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு பதிலளித்தார்.

இலங்கைக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் இடையே யுத்த உதவியை பெறும் எந்த விதமான ஒப்பந்தத்திலும் அரசாங்கம் கைச்சாத்திடவில்லை எனவும் அவ்வாறான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் கட்சித் தலைவர்களுக்கு அது பற்றி தெரிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பெற்றோலியம் கூட்டுத்தாபனம் இந்தியாவுக்கு விற்பனை

(கொழும்பு நிருபர்)

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுமதி, இறக்குமதி சந்தைப்படுத்தல் உரிமைகளை இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்திருக்கின்றது.

அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 268 பேர் பட்டம் பெற்றனர்

(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்குப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. பல்கலைக்கழக வேந்தர் வரகுணம் தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில் 268 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

பட்டமளிப்பு விழாவில் முக்கிய அம்சமாக மாஸ்டர் சிவலிங்கத்துக்கு இலக்கிய முதுமாணிப்பட்டமும், வண.பிதா ஹென்றி மில்லர், நடராஜா விக்னராஜா ஆகியோருக்கு கலாநிதிப்பட்டங்களும் வழங்கப்பட்டன.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் விடுதலை

## சட்டமா அதிபர் வழக்கை வாபஸ் வாங்கினார்

(கொழும்பு நிருபர்)

விடுதலைப்புலிகளுக்கு நிதியுதவி செய்ததாகவும், புலிகள் இயக்க உறுப்பினர் தொடர்பான தகவலை பொலிசாருக்குத் தெரிவிக்கத் தவறியதாகவும் குற்றம் சாட்டப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

1998 ஆம் ஆண்டு மருதானையில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்த செல்வராஜா பஞ்சநாதன் என்பவரே மேல் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார். இவருக்கு எதிராகத் தாக்கல் செய்திருந்த இரண்டு வழக்குகளையும் வாபஸ் பெறுவதாக சட்டமா அதிபர் மேல் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தியதையடுத்தே இவரை நீதிமன்றம் விடுவித்துள்ளது.

இவருக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்குவது பற்றி ஆராய அமைச்சர் குழு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக ஆராய்வதற்காக அமைச்சர் மட்டக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதியை அமைச்சரவை நேற்று முன்தினம் வழங்கியுள்ளது.

இந்த அமைச்சர் குழுவில் அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், லொக்கு பண்டார, ரவூப் ஹக்கீம்,ஜோன் அமரதுங்க ஆகியோர் இடம் பெறுவர்.

# அரியாலை சனசமூக நிலைய அரங்கில் சிங்களக் கலைஞர்களின் இசைநிகழ்ச்சி

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய திறந்தவெளி அரகில் நேற்று முன்தினம் இரவு இராணுவச் சிப்பாய்களை மகிழ்விப்பதற்காக மாபெரும் இசைநிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

முற்று முழுதாக சிங்கள இசைக்கலைஞர்கள் பங்கு கொண்ட இசை நிகழ்ச்சிக்கு வெளியாள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. இராணுவத்தினர் நிகழ்வில் கலந்து கொண்டு பாடல்களைப் பாடியிருந்தனர்.

மேற்படி சனசமூக நிலையமானது 2000ஆம் ஆண்டு குடாநாட்டில் ஏற்பட்ட யுத்தச் சூழ்நிலையின் பின்னர் தற்போதுவரை படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றமையும், புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் கூட பொதுமக்களிடம் இந்நிலையம் கையளிக்கப்படாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும் (57)

# குன்றும் குழியுமாக கிடக்கும் கோப்பாய் கைதடி வீதி

(கைதடி)

கோப்பாய் - கைதடி பிரதான வீதிப்பாலங்கள் திருத்தப்படாமல் இருப்பதால் மக்கள் போக்குவரத்திற்கு சிரமமப்படுகிறார்கள்.

கடந்த கால யுத்த அனர்த்தங்களின் போது சேதமாமக்கப்பட்டிருந்த பாலம் 2000ஆம் அண்டு தற்காலிகமாகத் திருத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் ஏ9 பாதை திறக்கப்பட்டதையடுத்து மக்கள் போக்குவரத்து அதிகரித்துள்ளது. குன்றும் குழியுமாக கிடக்கும் வீதியை திருத்துவது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் பல தடவை முறையிட்டும் நடவடிக்கை எடுக்காமை குறித்து மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (31)

# புத்தூரில் மர்மக் கொலை

(புத்தூர்)

புத்தூரில் கடந்த ஞாயிறன்று குடும்பஸ்தர் ஒருவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். புத்தூர் கிழக்கைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தை மு.பாலகிருஷணன் (வயது 44) என்பவரே கொலை செய்யப்பட்டிருந்தார். இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலிசாரால் கைதாகியுள்ளார்.

கொலை செய்யப்பட்டவர் மது போதையில் இருந்த போதே கொல்லப்பட்டதாக தெரிக்கப்படுகின்றது. இவரது சடலம் வீதியோரமாக மரம் ஒன்றின் கீழ் இருந்து கண்டெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (110)

# தரம் ஒன்பது மாணவருக்கு மாகாணமட்டத்தில் பொதுப் பரீட்சை

(ஊரெழு)

தரம் 9இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சை இவ் வருடம் வடக்கு கிழக்கு முழுவதும் மாகாண மட்டப் பொதுப் பரீட்சையாக இடம் பெறவுள்ளது.

அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ள இப் பரீட்சைக்கான முன்னோடிப் பயிற்சிப் பரீட்சைகள் பாடசாலை மட்டங்களில் இடம் பெற்று வருகின்றது.(96)-

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

# 150வது ஆண்டு நிறைவையொட்டி ஞாபகார்த்த முத்திரை வெளியீடு

(நெல்லியடி)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவு விழாவும் ஞாபகார்த்த முத்திரை வெளியீடும் எதிர்வரும் 19ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 1852ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி பல கல்விமான்களையும் அறிஞர்களையும் உரு வாக்கிய பெருமைக்குரியது. முத்திரை வெளியீடு தொடர்பான ஏற்பாடுகளில் பழைய மாணவர் சங்கம் முன்னின்று செயற்படுகின்றது. (13)

# இன்றைய நாள் இனிய நாள்

மேடம்: தேகசுகம், மகிழ்ச்சி, பிதாதேசுகம் சமம், தொழில் முன்னேற்றம், பணவரவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

இடபம்: தேகசுகம் மத்திமம், மனப்பயம், புதிய தொழில் முயற்சி ஆரம்பிப்பது நன்றல்ல, பணவரவு மத்திமம், கல்வி ஊக்கம் காட்டவேண்டும், அதிகலாபத்தை எதிர்பார்க்க முடியாது.

மிதுனம்: தேகசுகம் நன்று, மகிழ்ச்சி, கௌரவம், விருந்துக் கொண்டாட்டம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

கர்க்கடகம்: தேகசுகக் குறைவு, சோர்வுநிலை, தொழில் ஸ்தானத்தில் மனஸ்தாபம், பொருள் கஷ்டம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் மத்திமம்.

சிங்கம்: தேகசுகம் நன்று, மகிழ்ச்சி, தொழில் முன்னேற்றம், உறவினர் வருகை, கல்வி முன்னேற்றம், வியாபாரம் மத்திமம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

கன்னி: மாதா தேகசுகக் குறைவு, மனப்பயம், தொழில் முனனேற்றம், உறவினரால் செலவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

துலாம்: தேகசுகம் நன்று, மகிழ்ச்சி, தொழிலில் முன்னேற்றம், உறவினரால் செலவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

விருச்சிகம்: தேகசுகம் மத்திமம், மனச்சஞ்சலம், தொழில் சமநிலை, கல்வி முன்னேற்றம், வியாபார நிலை மத்திமம்.

தனு: தேகசுகம், கவலை, தொழில் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

மகரம்: தேகசுகம் நன்று, மகிழ்ச்சி, தொழிலில் சமநிலை, கல்வி முன்னேற்றம், வியாபார சமநிலை, சமய அறிஞர் தரிசனம்.

கும்பம்: தேகசுகம் நன்று, மகிழ்ச்சி, தொழில் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

மீனம்: தேகசுகம் நன்று, மகிழ்ச்சி, தொழில்ஸ்தானத்தில் மனஸ்தாபம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம் வேண்டும்.

# வல்லையில் சட்டவிரோத கல் அகழ்வு இயற்கைச் சூழல் பெரிதும் பாதிப்பு!

(நெல்லியடி)

வல்லை வெளியில் சட்ட விரோதமாக கல் அகழ்ந்தெடுக்கப்பட்ட பாரிய குழிகளில் பருவமழை ஆரம்பித்ததைத் தொடர்ந்து உவர்நீர் தேங்கத் தொடங்கியுள்ளது. இதேவேளை இன்னமும் சட்டவிரோத கல் அகழ்வு தொடர்ந்து இடம் பெறுகின்றது. இதனால் 1995ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மரநடுகைத்திட்டத்தின் மூலம் வளர்க்கப்பட்ட சவுக்கு, சஞ்சீவி, வாகை, பனை போன்ற பல்வகை மரங்களும் இயற்கைக் காடுகளும் அழிவுறும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாக இயற்கை ஆர்வலர்கள் வேதனையுடன் சுட்டிக் காட்டியுள்ளனர். மேலும்- இறால் உற்பத்திக்குப் பேர் போன இந்த இடத்தில் இவ்வாறான பாரிய குழிகள் தோன்றியுள்ளமை தமக்கு ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடும் என இறால் பிடிக்கும் தொழில் செய்வோர் அச்சம் வெளியிட்டுளளனர். (13)

# பொலிஸ் சோதனைஅதிகரிப்பு!

கொடிகாமம் பொலிஸ் நிலையப் பகுதியில் பொலிசாரினால் வாகனங்கள் திடீர்திடீரென மறிக்கப்பட்டு அவற்றுக்குரிய ஆவணங்கள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்கள் என்பன பரிசோதிக்கப்படுகின்றன.

உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் சாரதிகளிடம் தண்டப் பணம அறவிடப்படுகிறது. இதனால் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி வருவோர் நீண்ட நேரமாக வீதிகளில் காத்து நிற்பதை அவதானிக்க முடிகிறது. (29)

# நஞ்சருந்திய யுவதி ஆஸ்பத்திரியில் மரணம்

(யாழ்ப்பாணம்)

நஞ்சு அருந்தி மயங்கிய நிலையில் மல்லாவியில் இருந்து யாழ் எடுத்து வரப்பட்ட இளம் பெண் ஒருவர் மரணமடைந்து விட்டார்.

துணுக்காய் கொக்காவில் வீதியைச் சேர்ந்த சோமசுந்தரம் கௌரி(வயது-18) என்பவரே இவ்வாறு மரணமடைந்தார். நேற்று முன்தினம் முன்னிரவு கண்டி வீதியூடாக மயங்கிய நிலையில் எம்.எஸ்.எவ் வாகனம் மூலமாக இவர் யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிப்பதற்காக அழைத்து வரப்பட்டார். முகமாலையில் இராணுவச் சோனைச் சாவடியில் தொடர்ந்து செல்ல அனுமதி பெறுவதற்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. நீண்ட நேரத்தின் பின் தொடர்ந்து செல்ல அனுமதி கிடைத்தது. உயிருடன் போராடிக் கொண்டிருந்த நிலையிலும் படையினரின் அனுமதி கிடைக்காமையினால் தாம் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருந்ததாக மரணமானவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

# வணிக பட்டதாரிகளுக்கு!

வணிகமாணி, தொழில் நிர்வாக மாணி, கணக்கியலும் நிதிமாணி, உயர் தேசிய வணிக டிப்ளோமா, பொருளியல் சிறப்பு பட்டதாரிகளில் வன்னியில் நிறைவேற்றுப் பணிகளுக்கு பணியாற்ற விருப்பமுள்ளவர்கள் பெயர்களை நாளை காலை 9.30க்கு யாழ்.மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தில் பதிவு செய்யும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



திருமலைச்சம்பவத்தில் கொல்லப்பட்ட மூவரது சடலங்களை முதலாவது படத்திலும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களை இரண்டாவது ,மூன்றாவது படங்களிலும் படுகாயமடைந்த ஒருவர் ஸ்ரெச்சரில் கொண்டுவரப்படுவதை நான்காவது படத்திலும் பலியானவர்களில் ஒருவரான சோணலிங்கத்தின் உறவினர்கள் கவலையுடன் இருப்பதை ஐந்தாவது படத்திலும் கிளிவெட்டியில் இருந்து வரும் போது தாக்கப்பட்ட அம்புலன்சை ஆறாவது படத்திலும் காணலாம். (படங்கள்-கௌதமன்)

## வீதி மறியலில்......

நகர •மத்தியில் வைத்து சிங்களமக்கள் மறியற்போராட்டம் செய்தபோது பார்த்துக் கொண்டிருந்த நீங்கள் எம்மை ஏன் தடுக்கிறீர்கள்? என பொதுமக்கள் கேள்வியெழுப்பியபோதும் பொலி ஸார் அவர்களை அப்பகுதியிலிருந்து விரட்டியடிக்க முற்பட்டனர்.

## திடீர் குண்டு வீச்சும் சூடும்

மக்கள் விலகிச் செல்ல ஆரம்பித்தபோது எதிர்த் தரப்பிலிருந்து திடீரென கைக்குண்டு ஒன்று அருகிலிருந்த மதிலுக்கு பின்னிருந்து வீசப்பட்டதுடன், சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது அப்பகுதியில் நின்ற காந்தி நகரைச் சேர்ந்த நகர சுத்திகரிப்புத் தொழிலாளியான சோணமுத்து சோணலிங்கம்(வயது-18) பாலையூற்றைச் சேர்ந்த கிறிஸ்ரி மயூரன்(வயது-22), கணபதிப்பிள்ளை சசிக்குமார்(வயது 31)ஆகியோர் பலியாகினர். 40க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

அப்பகுதி காயமடைந்தோரின் கூக்குரல்களாலும், வேதனைக் கதறல்களாலும் நிரம்பியது. வீதி யெங்கும் இரத்தம் வெள்ளமாய்ப் பெருகியது.

படுகாயமடைந்தவர்களை வீதி வழியாகக் கொண்டு செல்லும் போது அப்பகுதியில் கூடிய சமூக விரோதக்குழுவினர் தாக்கத் தொடங்கினர். கற்களாலும் இரும்புக் கம்பிகளாலும் கண்மூடித்தனமாக தாக்கிய குழுவினர் லிங்கநகர் ரயில்வே கடவையில் வைத்தும் மக்கள் மீது துப்பாக்கியால் சுட்டனர்.

## உதவவந்த வைத்தியர் மீதும் தாக்குதல்

இதேவேளை இச்சம்பவம் பற்றி அறிந்த திருமலை வைத்தியசாலை வைத்தியரான றோஹான் என்பவர் அம்புலன்ஸ் சகிதம் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தார்.

ஆனால் சுற்றுவட்டப் பகுதி அருகே அம்புலன்ஸ் வந்ததும், அம்புலன்சை மறித்த சிங்கள சமூகத்தைச் சேர்ந்த சிலர் அம்புலன்ஸிலிருந்த வைத்தியரையும் தாக்கினர்.

## படகுகள் வழியாக வைத்தியசாலைக்கு

இதனால் படுகாயமடைந்தவர்களை வீதி வழியாக திருமலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாத நிலையில் செல்வநாயகபுரம் ஊடாக, அலஸ்தோட்டம் அகதிகள் முகாம் மற்றும் பள்ளத் தோட்டம் வழியாக கடற்கரைப் பகுதிக்கு படுகாயமடைந்தவர்களை எடுத்துச் சென்ற மக்கள் அங்கிருந்த மீன்பிடிப் படகுகளில் அவர்களை ஏற்றிக் கொண்டு திருமலை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

நான்கு மீன்பிடிப் படகுகளில் படுகாயமடைந்தவர்களில் பதினாறு பேர் மட்டும் திருமலை வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட நிலையில் கடற்படையினர் ஏனைய படகுகளைத் தடுத்தனர்.

இதனால் கடற்கரையோரம் வழியாக ஓட்டோக்களிலும், மோட்டார் சைக்கிள்களிலுமாக ஏனையோர் மிகுந்த சிரமத்தின் மத்தியில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

படுகாயமடைந்தவர்களால் திருமலை வைத்தியசாலை நிரம்பியது. இரத்தம் போதியளவு இல்லாததால் பொதுமக்களிடமிருந்தும் இரத்தம் கோரப்பட்டது.

## ஊரடங்கு அமுலானது

நிலைமை மேலும் பதற்றமடைய 11 மணியளவில் பொலிஸார் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கை அறிவித்தனர். மக்கள் வீடுகளில் முடங்க, வீதிகள் வெறிச்சோடின.

நண்பகல் 12.15 மணியளவில் கிளிவெட்டியிலிருந்து மூன்று நோயாளர்களை ஏற்றிக் கொண்டு வந்த அம்புலன்ஸ் வண்டியொன்று மீண்டும் அபேபுர பகுதியில் கூடிவர்களால் தடுத்துத் தாக்கப் பட்டது. அம்புலன்சின் 'விண்ட் ஸ்கிரீன்' உடைக்கப்பட்டது. சாரதியும் தாக்கப்பட்டார்.

அம்புலன்ஸில் இடைநடுவே ஏறிப் பயணித்த சிவிலுடையில் வந்த சிங்கள சமூகத்தைச் சேர்ந்த பொலிஸ் ஒருவரும் இதன்போது தாக்கப்பட்டதாகவும் தெரிகின்றது.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து திருமலையில் நேற்று மாலைவரை பதற்றமானசூழல் தொடர்ந்த வண்ணமிருந்தது.

ஊரடங்கு அமுலில் இருந்த போதும் வைத்தியசாலைக்கு பொதுமக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

## இரவும் தொடர்ந்த பதற்றம்

நேற்று இரவு திருமலை நகரப் பகுதியில் பதற்றம் குறைந்த போதும் காந்திநகர், அன்புவழிபுரம், லிங்கநகர், பாலையூற்று பகுதிகளில் பதற்றம் தணிந்ததாகத் தெரியவில்லை. அச்சம் காரணமாக திருக்கடலூரைச் சேர்ந்த பொதுமக்கள் அலஸ்தோட்டம் பகுதியில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

நேற்றிரவு 7.10 மணியளவில் திருமலை நகரை அண்டிய பகுதியில் தொடர்ச்சியாக சில துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன.

இதேவேளை நேற்று மாலை திருமலை வைத்தியசாலைக்கு நேரடியாக வந்த திருமலை நீதவான் தியாகேந்திரன் கொல்லப்பட்ட பொதுமக்களது சடலங்களைப் பார்வையிட்ட பின் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சடலங்கள் இன்று உறவினர்களிடம் கையளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மூவர் பொலிஸாரால் கைது

இன்று அதிகாலை கிடைத்த தகவல்களின்படி கைக்குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சிங்கள சமூகத்தைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டிருப்பதாக திருமலைப் பொலிஸார் தெரிவித்தனர்.இதேவேளை மூதூரிலும் திருமலையிலும் இன்றும் ஊரடங்கு தொடரும் எனத் தெரியவருகின்றது.

## கண்காணிப்புக் குழுவிடம் புகார்

திருகோணமலையில் நேற்று இடம் பெற்ற தாக்குதல் சம்பவங்களில் பொதுமக்கள் உயிரிழந்தமை மற்றும் காயமடைந்தமை குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் புறூவ் ஹோவ்டேக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் முறைப்பாடு செய்துள்ளார்.

## இரு மேஜர் ஜெனரல்...

அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தலைமையிலும் கூட்டம் ஒன்று நடைபெற்றது

திருமலை சம்பவம் தொடர்பாக நாம் கவலையடைகிறோம். இரு தரப்பும் இந்நிலையில் அவதானமாக செயற்படுவதாகவும் திருமலை நிலைமைகள் சமாதான முயற்சிகளை பாதிக்காது எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ நேற்று செய்தியாளரிடையே பேசும்போது தெரிவித்தார்.

## ஜனாதிபதி...

இதே வேளை 24 மணி நேரமும் இயங்குவதாக அமையும் ஜனாதிபதி செயலகம் ஒன்று நேற்று மாலையிலிருந்து இயங்க ஆரம்பித்துள்ளது. கிழக்கு மாகாண நிலைமைகள் குறித்து இச்செயலகம் விபரங்களை பெறறுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## காயமடைந்தோர் விபரம்

திருகோணமலை கைக்குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்தோர் விபரம் வருமாறு :-

அம்புலன்ஸ் சாரதியான தம்பையா (54), தவராசா (33), சதீஷ்குமார் (18), காந்தன் (20), சதீஸ் (23), செல்வராசா, சுரேஷ்குமார் (27), நாதன், சிறி தயானந்தன், வினோதராஜ் (25), சுப்பிரமணியம்(48), ஆனந்தபாபு(16), ஜஸ்ரின், வித்தியானந்தன், கௌரிராஜ், ராஜேஸ்குமார் (21), ராஜேஷ்கண்ணா (24), மதிஜெயந்தன் (29), இருதயநாதன் அருள் (22), பிரசாந்(21), சுரேஷ்குமார்(27) செந்தில்குமார் (21), யோகானந்தம் (20) பிரபாகரன் (25), பிரபாகரன் (17) ஜோன்சன்(38), சதீஷ் (23) நாகேந்திரராஜா (18), பிரதீப்(19), ஆனந்ததாஸ் (20), ஜயலிங்கம் (28), சபூர் (38), கண்ணா (15), சுரேஷ்கரன் (24), றோய் ஜோன்சன் (28), முருகேசு (83), பாலகுமார் (21), சின்னான் (15), ராஜேந்திரன் (25), பொன்னுத்துரை (52) இவர்களுடன்இரு பொலிசாரான சேனக (30), நவரட்ண (34) . காயமடைந்தவர்களில் 18 பேரின் நிலைமை கவலைக் கிடமாயுள்ளது. இவர்களில் சிலர் சத்திர சிகிச்சைக் குட்படுத்தப்பட்டனர்.

## காஞ்சிரங்குடாவில் பலியான மக்கள் நேற்று நல்லடக்கம்

(மட்டக்களப்பு)

திருக்கோவில், காஞ்சிரங்குடாவில் கடந்த புதன் அதிரடிப்படையின் துப்பாக்கிச்சூட்டுக்கு பலியான பொதுமக்களின் பூதவுடல்கள் நேற்று இரண்டு மணியளவில் திருக்கோவில் மாணிக்கப்பிள்ளையாரடி பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டன.

பொது மக்களின் பூதவுடல்கள் பேழைகளில் வைக்கப்பட்டு ஊர்தியில் திருக்கோவில் பிரதேச வீதிகள் எங்கும் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு பின் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

## குடும்பஸ்தர் பரிதாப மரணம்

(சங்கத்தானை)

மட்டுவில் வடக்கு பன்றித் தலைச்சி அம்மன் கோவிலடிப் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் அமுக்க வெடியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்.

மட்டுவில் வடக்கை சேர்ந்த விசுவலிங்கம் சிவபாதம்(வயது45) என்பவரே அமுக்க வெடியில் சிக்கி உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

22வது பொதுப்பட்டமளிப்பு விழா – 2002

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 22 வது பொதுப் பட்டமளிப்பு விழா தவிர்க்க முடியாத சூழ்நிலையால் ஏற்கனவே அறிவித்தபடி இன்று(12.10.2002) சனிக்கிழமை நடைபெறுவதற்குப் பதிலாக மறுநாள் 13.10.2002 ஞாயிற்றுக்கிழமை 12ஆம் திகதிய ஒழுங்கின் பிரகாரம் நடைபெறும் என அறியத்தருகின்றேன்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம். (சி-056)

இப்பத்திரிகை- இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.